உ

திருச்சிற்றம்பலம்

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# செக்கர்வேள் செம்மாப்பு

## முதல் காண்டம்

## வினா - விடை






ஆசிரியர்:

சித்தாந்த சரபம், சைவ சித்தாந்த கலாநிதி

முனைவர் **கோமதி சூரியமூர்த்தி** எம்.ஏ., பி.எச்.டி.

உ

திருச்சிற்றம்பலம்

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# செக்கர்வேள் செம்மாப்பு

## முதல் காண்டம்

## வினா-விடை




ஆசிரியர்:

**சித்தாந்த சரபம், சைவ சித்தாந்த கலாநிதி**

முனைவர் **கோமதி சூரியமூர்த்தி,** எம்.ஏ., பி.எச்.டி.

மேனாள் பேராசிரியர், சைவ சித்தாந்தத்துறை

மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்



மஹா தேஜோ மண்டல சபை (15/88) அனுமதியுடன்

நூல் வெளியிடுவோர்:

**கீதா இராஜமகேந்திரன்,** B.Com., M.B.A.

Indian Oil Star Gas Distributor

**கல்பனா மஹாதேவன்,** B.E.

**மஹாதேவன் சதாநந்தன்,** B.E., M.S. (USA)

**விஷ்ணுபிரியா கார்த்திகேயன்,** MCA

**கார்த்திகேயன் சதாநந்தன்,** B.E., Q.L.A.S.Q.S. (UK)

Computer Software Specialists, U.S.A.,

# நூல் விவரம்


நூல் : **செக்கர்வேள் செம்மாப்பு**
முதல்காண்டம்
வினா-விடை

பதிப்பு : 2014

நூல் விலை : ரூ. 30/-

ஆசிரியர் : முனைவர்
**கோமதி சூரியமூர்த்தி,** எம்.ஏ., பி.எச்.டி.

வெளியீடு : நடராசன் - கனகாம்புஜம்
அறக்கட்டளை

அச்சிட்டோர் : எஸ்.எஸ். கிராபிக்ஸ்
54/2, முகம்மது உசேன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 2848 5236

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# பதிப்புரை

**''ஞான நூல்தனை ஓதல், ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல், தான்கேட்டல், நன்றா
ஈனம் இலாப் பொருள் அதனைச் சிந்தித்தல், ஐந்தும்
இறைவன் அடி அடைவிக்கும் எழில் ஞானபூசை''**

**– சிவஞான சித்தியார்**

## முடிவான சித்தாந்தம்:

அத்தியாச்சிரம, சுத்தாத்வைத, வைதிக, சைவசித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிச் செய்த சைவ சித்தாந்தச் சாத்திர சிறந்த நூல்களில் ஒன்றாய் விளங்குவது **''செக்கர்வேள் செம்மாப்பு''**. இந்நூலின் சிறப்பைச் சுவாமிகள் 1923 ஆண்டில் எழுதிய எழுவாயுரையில் அறியலாம். ''செக்கர்வேள் செம்மாப்பென்னும் பெயரிய இந்நூல், வைதிக சைவசமய நிலையை ஐயந்திரிபெற இனிதெடுத்துக் கூறி உண்மையை நிறுவுமாறு செவ்வேட் பரமன் திருவருள் ஒன்றனையே முன்னிட்டு எம்மாற் பாடப்பட்டது. இதனுள், முழுமுதலிக்கணவதிகாரமும், செக்கர் வேளிறுமாப்பினுள் வீடுபேற்றதிகாரமும் எமது **முடிவான சித்தாந்தமாகும்''**

## சொரூப, தடத்த இலக்கணங்கள்:

இந்நூலை எழுபது ஆண்டுகள் கடந்த பின் சுவாமிகள் பாடியருளினார். இந்நூலில் இறைவனின் சொரூப, தடத்த இலக்கணங்கள் விளக்கப்பட்டுள்ளன. சிவம் தன்னில் தானாய் தன்னையே நோக்கி நிற்கும் நிலை சொரூப சம்பந்தம். உலகை நோக்கி நிற்கும் நிலை தடத்த

சம்பந்தம் எனப்பெறும். ''அலகில் சோதியன்'' - சொரூப இலக்கணம், ''நிலவுலாகிய நீர்மலி வேணியன்'' - தடத்த இலக்கணம்.

**தெளிவாகக் கற்றலின் பயன்:**

இந்நூலைத் தெளிவாகக் கற்றால் கந்தவேள், இருதேவியர் - தெய்வானை அம்மையார் (ஞானசத்தி), வள்ளி பிராட்டியார் (கிரியா சத்தி) - படைக்கலங்களுள், குறிப்பாக, வேற்படை, மயில்வாகனம், கோழிக்கொடி ஆகிய அனைவர் பற்றிய வாச்சியார்த்தமும் இலட்சியார்த்தமும் அறிந்து கொள்ளலாம். இத்தமிழகத்தில் முருகவேள் பற்றி ஒரு ஒப்பற்ற சாத்திர நூலாக இதுபோன்று எந்த முனிவரும், எந்தப் புலவரும் நிகழ்த்திலர். சுவாமிகள் ஒருவரே இதனைச் செய்தருளி நமக்கு வழங்கியுள்ளார் என்று முனைவர் பேராசிரியர் ப.இராமன் அவர்கள் போற்றியுள்ளார்கள். இவர்கள் பாம்பன் சுவாமிகளின் நூலை ஆராய்ச்சி செய்து சென்னை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். தமிழக அரசின் **''திரு.வி.க.''** விருதைப் பெற்ற பெருமைக்குரியவர்.

சமய நூல்களைக் கற்றவரும், அவை கல்லாதவரும் ஆகிய யாவரும் சமய உண்மைகளைத் தங்கள் உள்ளத்தில் எளிதாக உணர்ந்து மெய்பொருளைக் கூடுமாறு ''செக்கர்வேள் செம்மாப்பு'' என்ற நூலைக் கூறுவேன் என்று ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பாயிரத்தின் இரண்டாம் பாடலில் அருளியுள்ளார்கள்.

இந்நூல் மஹாதேஜோ மண்டல வெளியீடாக 1924ஆம் ஆண்டில் முதற்பதிப்பாகவும், 2009 ஆம் ஆண்டில் ஐந்தாம் பதிப்பாகவும் சென்னை

மேற்கு மாம்பலம் திரு. ந. ஜெயராமன் அவர்களால் வழங்கப்பட்டது. அவர்கள் பாம்பன் சுவாமிகளின் அனைத்து நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டுள்ள பாக்கியசாலி.

## செக்கர்வேள் என்னும் குகப்பிரமன்:

செக்கர்வேள் பெயரையுடைய முருகப்பெருமான் **சிவந்த ஒளிவடிவினன்.** உயிர்களைத் துன்பத்தில் ஆழ்த்தும் காமனின் (மன்மதனின்) வன்மையை அழித்தருளும் **வன்மையுடையவன்.** அழிவற்ற **இறைவன்.** துகள் அறு **குகன்.** எல்லாப் பொருள்களுக்குள்ளும் நிறைந்திருப்பவன் என்ற பொருள்தரும் **''அந்தர்யாமி''.** உயிர்களைச் செலுத்துவதால் **கடவுள்.** அனைத்தும் உள் அடக்கும் பொருள் ஆகலின் **பரன்.** நினைத்தது முடிக்கும் ஆற்றால் **நிறைசத்திமான்.** சோதி ஆகலின் **பரதேவு.** உயிர்களின் மலக்குற்றம் நீக்கும் **சிவன்.** எண்ணற்ற உயிர்களுக்குத் தலைவனான **பசுபதி.** உயிர்கட்கு இன்பத்தை வழங்குதலால் **சம்பு.** அளவற்ற செல்வத்துக்குத் தலைவன் **ஈசன்.** சாரூபம் பெற்றவர்கள் வழிபடும் **மகேசன்.** உயிர்கட்கு நலத்தையே வழங்கும் **சங்கரன்.** பிரமமாய் விளங்கும் **சுப்பிரமணியம்.** சத்து, சித்து, ஆனந்தம் பெயரிய **சச்சிதானந்தன்.** இவ்வனைத்துப் பொருள்களாய் விளங்குவது **''செக்கர்வேள்''** என்னும் **குகப்பிரமன்** ஆவன் என்று பாம்பன் சுவாமிகள் ''செக்கர்வேள் செம்மாப்பு'' நூலில் விளக்கியுள்ளார்கள்.

## சிறுதெய்வ வழிபாடு:

வேலேந்திய விமலன் குமார பரமேசுவனைச் சிந்தியாது, வழிபடாது, சிறு தெய்வங்களை வழிபடுவதன் பயன் தமது உள்ளங்கையில் நிரம்பியுள்ள தேனைத் தானே

கவிழ்த்துவிட்டு, புறங்கையில் சிறிதே வழியும் தேனை நாக்கினால் நக்கிச் சுவைக்கும் செய்கையினை ஒத்தாகும் என்கிறார் சுவாமிகள். இவ்விளக்கங்கள் அனைத்தும் பாம்பன் சுவாமிகள் உயிர்களிடத்தில் கொண்டுள்ள கருணையே காரணமாகும்.

**முருக வழிபாடு:**

முருக வழிபாடு பொலிவுடைய அழகைக் கொடுக்கும் நிலைத்த புகழைத் தரும். இருவினைகளை அழிக்கும். இன்பு வாழ்வைத் தரும். புத்தியில் அறிவை விளக்கம் செய்யும். வீடுபேறு தரும் என்று சுவாமிகள் தாம் அருளிய பஞ்சாமிர்த வண்ணத்தில் கூறியுள்ளார்கள். முருகப்பெருமானின் திருவடி பாவத்தை ஒழிக்கும். மரணபயத்தைப் போக்கும் என்று திருவலங்கற்றிரட்டு வெள்ளியியலில் அறிவித்துள்ளார்.

**வினா-விடை வடிவில் விளக்கம்:**

சுவாமிகள் முடிவான சித்தாந்தமாக விளங்கும் 140 பாடல்களைக் கொண்ட **''செக்கர்வேள் செம்மாப்பு''** என்ற நூலில் பொதிந்துள்ள தத்துவங்களை மிகச் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும்படி விளக்கவுரையை அளிக்கும்படி பெருமதிப்புக்கும், போற்றுதலுக்கும் உரிய சித்தாந்த சரபம், சைவ சித்தாந்த கலாநிதி முனைவர் **திருமதி. கோமதி சூரியமூர்த்தி அம்மையார்** அவர்களை வேண்டினேன். வேண்டுகோளைக் கனிவுடன் ஏற்று அம்மையார் அவர்கள் வினா-விடை வடிவத்தில் எளிய முறையில் விளக்கங்கள் அளித்துள்ளார்கள். இந்த புதிய முறையின் மூலம் சாதாரண மக்களும் சிறந்த பயனடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. பாம்பன் சுவாமிகள் வினா-விடை வடிவத்தில் வசன நடையிலும்

செய்யுள் நடையிலும் அருளிய பல நூல்களில் சிலவற்றைக் கீழே காணலாம்.

வசன நடையில்

1. ஸ்ரீ சுப்பிரமணிய வியாசம்
2. குருசிஷ்ய சம்பவ வரலாற்று வியாசம்

செய்யுள் நடையில்

1. சீவயாதனா வியாசம் - சிவஞான தேசிகம்
2. அசோக சாலவாசம்
3. பரிபூரணானந்தபோதம்

இவைகளைப் புரிந்துகொள்ள சிறந்த தமிழ் புலமை மட்டுமல்லாமல், சுவாமிகளின் குருவருளும் அவசியம்.

**ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமான்:**

சைவசமய தோத்திரங்கள், சைவ சித்தாந்த சாத்திரங்கள் ஆகியவற்றில் ஆழ்ந்த புலமைவாய்ந்த அம்மையார் அவர்கள் பாம்பன் சுவாமிகள் நூல்களில் கடந்த ஐந்து வருடங்களாக மிகுந்த ஆர்வம் கொண்டதற்குக் காரணம் மாணிக்க வாசகரின் சிவபுராண வாக்கைப்போல் அம்மையாருக்குப் பாம்பன் சுவாமிகள் ''ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானாக'' விளங்குகின்றார் என்று அடியேன் கருதுகிறேன்.

அம்மையார் அவர்கள் பாம்பன் சுவாமிகளின் நூல்களைக் காதலாகி, கசிந்து, கண்ணீர் மல்கி ஓதுகின்ற போதெல்லாம் அந்நூல்களில் பொதிந்துள்ள சைவசமய தோத்திர, சாத்திர புத்தம் புதிய கருத்துகளை அறிந்து உணர்ந்து வியப்படைந்து அந்நூல்களைத் தம் இளம் பிராயத்தில் ஓதுகின்ற வாய்ப்பு ஏற்படவில்லையே என்று

வருந்துகிறார்கள். கடந்த ஐந்து வருடங்களிலாவது இவ்வாய்ப்பு கிடைத்துள்ளதே என்று தேர்ச்சியடைந்து பாம்பன் சுவாமிகளின் பதமலரைப் போற்றுகின்றார்கள். இப்பணியில் இவருடைய அருமைக் கணவரான டாக்டர் செ.ஈ. சூரியமூர்த்தி அவர்கள் அம்மையாருடன் இணைந்து பாம்பன் சுவாமிகளின் நூல்களை ஓதி பரவசமடைகிறார்கள். பாம்பன் சுவாமிகளின் நூல்கள் உயர்ந்த நடையில் உள்ளதால் அவைகளைப் புரிந்து கொள்வதற்கு எளிய முறையில் எழுதப்பட்டுள்ள அம்மையாரின் விளக்கங்கள் பெரிதும் துணை செய்கின்றன. **''என் போதகத்தை உன்னதமான மலைமீது ஏற்றிய தீபம் என நினைமின்''** என்று பாம்பன் சுவாமிகள் தம் சீடர்களுக்கு அருளிய உபதேச மொழிகளான மூன்றாம் **''செவியறிவுறூஉ''** வில் கூறியுள்ளார். அத்தீபத்தின் ஒளிக்கதிர்களால் மலை அடிவாரத்திலுள்ள பாமரமக்களும் பயனடைய வேண்டுமென்ற சமுதாய மேம்பாட்டு சிந்தனையின் வெளிப்பாடாக அம்மையார் அவர்களின் விளக்கவுரைகள், எழுத்துப் பணிகள் அமைகின்றன. பேராசிரியர் முனைவர் ப. இராமன் அவர்கள், நக்கீரன் வழியடிமை புலவர் பி.மா. சோமசுந்தரனார் அவர்கள், தமிழக அரசு வணிக வரித்துறை துணை ஆணையர் குகஸ்ரீ கிருஷ்ணசாமி முதலியார் போன்ற உரையாசிரியர்களின் மறைவினால் ஏற்பட்டுள்ள இடைவெளியை ஈடுசெய்வது அம்மையாரின் பாம்பனாற் பணியாகும். இப்பணியை அம்மையார் அவர்கள் தொடர்ந்து நடத்த பாம்பன் சுவாமிகளின் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

**நன்றி நவிலல்:**

அம்மையார் அவர்களுக்கும், அவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்து இந்நூலுக்கு அணிந்துரை

வழங்கிய அவருடைய கணவனார் சித்தாந்த தொண்டர் மாமணி, அறநெறி அறிஞர், பேராசிரியர் முனைவர் **செ.ஈ. சூரியமூர்த்தி,** M.Sc., M.S., Ph.D (USA) (மேனாள் பேராசிரியர், சூரிய ஆற்றல்துறை, மதுரை பல்கலைக்கழகம்) அவர்களுக்கும் மஹாதேஜோ மண்டல சபை சார்பாகவும், எங்கள் பெற்றோர் நடராசன் - கனகாம்புஜம் அறக்கட்டளை சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை அழகாக அச்சிட்டு உதவிய சென்னை எஸ்.எஸ். கிராபிக்ஸ் உரிமையாளர் திரு. எஸ். அரங்கநாதன் அவர்களின் சைவப்பணியைப் போற்றி அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சைவசமய ஆதீனங்களின் அருளாசி:**

16.03.2014 தேதியில் பங்குனி உத்திரப் பௌர்ணமி நன்னாளில் சென்னை, திருவான்மியூரிலுள்ள பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் இந்தியாவின் மேனாள் தூதர் **திரு. A. கருப்பையா,** IFS (R) அவர்கள் தலைமையில், **திரு. K. பெரியய்யா,** I.P.S. - D.I.G of Police அவர்கள் **செக்கர்வேள் செம்மாப்பு முதல் காண்டம் - வினாவிடை** என்ற நூலை வெளியிடுகிறார்கள். இவ்விரு சான்றோர்கள் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, பாம்பன் சுவாமிகளிடம் தூய அன்பு கொண்டு இவ்விழாவில் முக்கியப் பொறுப்பேற்று கலந்து கொள்வதால் இவ்விழாவின் சிறப்பு மேலும் மேன்மையடைகிறது. அவர்களுக்கு எங்கள் இதயம் கலந்த நன்றி.

திருக்கயிலாயப் பரம்பரை தருமை ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், பேரூர் ஆதீனம், சிரவை ஆதீனம் ஆகியோர்களின் அருளாசியுடனும், பாம்பன் சுவாமிகள் குருவருள்,

மயூரநாதப் பெருமாள் திருவருள் துணையோடும் இந்நூல் வெளியிடப்படுவது எங்கள் பாக்கியமாகக் கருதுகிறோம்.

எங்கள் குடும்பத்தின் சார்பாக இந்நூல் 23வது வெளியீடாக அமைகிறது. திண்டிவனம் அருகிலுள்ள மயிலம் முருகப்பெருமான் திருக்கோயிலின் வருடாந்திர பங்குனி உத்திர விழாவில் எங்கள் கொள்ளு பாட்டனார் உள்ளிட்ட மூதாதையர்கள் ஆற்றிய சைவப்பணியின் தொடர்ச்சியாக எங்கள் குடும்பத்தினர், முருகனையே முழுமுதற்கடவுளாக போற்றிய பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தின் பங்குனி உத்திர பௌர்ணமி விழாவில் கடந்த 40 ஆண்டுகளாகச் சிவத்தொண்டு தொடர்ந்து செய்யும் பேற்றை அளித்துவரும் பாம்பன் சுவாமிகளின் குருவருளை நன்றியுணர்வோடு போற்றுகின்றோம். இப்பணியை எங்கள் வருங்கால சந்ததியினரும் தொடரவேண்டுமென்று பாம்பன் சுவாமிகளின் பாதமலரைப் பணிந்து பிராத்திக்கின்றோம்.

***இங்ஙனம்***

நடராசன்-கனகாம்புஜம் அறக்கட்டளை சார்பாக

பாம்பனார்-வாரியார் அடிப்பொடி, சைவத்திருமுறைச் செம்மல்,

சித்தாந்த ரத்தினம் **செ.வே. சதாநந்தன்**

Chief Refinery Co-ordinator (Retd.), Indian Oil

தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம் (தோற்றம் 1905)

தலைவர், மஹாதேஜோ மண்டல சபை (தோற்றம் 1926)

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

*அறக்கட்டளை மன்ற உறுப்பினர்*

**பொ.ந. லோகநாதன்**
Manager (Retd.) Indianoil

**பொ.ந. நமசிவாயன்**
G.M. (Retd.) Madras fertilizers and MD., A.B.N., Logistics

**வி.ச. சிவக்குமார்**
Manager (Retd.) Southern Industries

**கீதா இராசமகேந்திரன்**
Indianoil Gas Star Distributor
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

# முன்னுரை

''சித்தாந்த சரபம், சித்தாந்த வித்தகி, சைவ களஞ்சியம், சிவஞான வாரிதி''

## முனைவர் கோமதி சூரியமூர்த்தி

''ஐயந் தீர்க்கும் நுண்ணறிவோய் போற்றி
வையம் குகன் புகழ் வளர்த்தோய் போற்றி.''

அண்மைக் காலத்தில் அவதரித்து, பல்லோராலும் வணங்கப்படும் பெருமையுடையராய், இன்றும் புகழுடன் நம்மிடையே வாழ்பவர் பாம்பன் சுவாமிகள் என்று போற்றப்படும் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஆவார்.

ஆறுமுகச் சிவனான முருகப்பெருமான் ஒருவனையே போற்றி வழிபட்டவர். ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு அருட் பாடல்களை அருளி அவற்றை ஆறு மண்டலங்களாக தொகுத்தவர். செக்கர்வேள் செம்மாப்பு என்ற நூல் நான்காம் மண்டலத்தில் தொகுக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி, வடமொழி என்னும் இரு மொழிகளிலும் புலமை வாய்ந்த சுவாமிகள் இந்நூலை வடமொழி கந்தபுராணத்தைத் தழுவி எழுதியுள்ளார்.

மறை, ஆகமம், வடமொழிக் கந்த புராணம் என்ற நூல் ஆனவையையும், கிடத்தற்கரிய ஒப்பற்ற காட்சி அளவையையும் அடிப்படையாகக் கொண்டு இந்நூலை சுவாமிகள் எழுதியுள்ளார். பாமர மக்கட்கும் புரியும் வண்ணம் கருத்துக்களை உவமை என்னும் உத்தியால் சுவைபட எழுதியுள்ளார். பல்சமய தத்துவப் புலமை வாய்ந்த சுவாமிகள் முருகப் பெருமானின் பல்வேறு பெயர்கள், காரணங்கள், கைகளில் உள்ள படைக்கலங்கள், அவை உணர்த்தும் தத்துவம் இவற்றைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

பாம்பன் சுவாமிகள் பற்றி எதுவும் தெரியாத அடியேனுக்குச் சுவாமிகளின் நூல்கள் பலவற்றை அன்பளிப்பாகத் தந்து, படித்து நூல் எழுதும்படி ஆற்றுப்படுத்தியவர் சென்னை சைவ சித்தாந்த பெருமன்றத் தலைவரும், மகாதேஜோ மண்டலத் தலைவருமான பாம்பன்-வாரியார் அடிப்பொடி, சித்தாந்த ரத்தினம் திரு. செ.வே. சதாநந்தன் ஐயா ஆவார்.

**பாம்பன் சுவாமிகள் உணர்த்தும் மனித மேம்பாட்டுச் சிந்தனைகள்** என்ற நூல் 2010இல் பங்குனி உத்திர நாளில் திருவான்மியூர் பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் இந்து சமய அறநிலையத் துறை முன்னாள் ஆணையர் திரு. ச. மெய்கண்ட தேவர் I.A.S. அவர்கள் தலைமையில் திரு. செ.வே. சதாநந்தன் அவர்களின் குடும்ப சார்பாக வெளியிடப்பட்டது.

அனைத்து சைவ மக்களும் சுவாமிகளைப் பற்றி அறிதல் வேண்டும் என்ற நோக்கத்தில் எழுதப்பட்ட **பாம்பன் சுவாமிகளின் பெருமை** என்ற நூல் 2011 ஜுன் மாதம் சென்னை சைவ சித்தாந்த மன்ற 106ஆம் ஆண்டு நிறைவு விழா அன்று மாதவத்தூரில் வெளியிடப்பட்டது. **பாம்பன் சுவாமிகளின் பாடல்கள் உணர்த்தும் சைவ சித்தாந்தக் கோட்பாடுகள்** என்ற நூல் 2012 லும், **பாம்பன் சுவாமிகள் பாடல்களில் சைவ சமயாச்சாரியார் நால்வர் வரலாற்றுக் குறிப்புகளும் சிந்தனைகளும்** என்று நூல் 2013லும் திருவான்மியூரில் சுவாமிகள் சமாதி நிலையத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

திரு. செ.வே. சதாநந்தன் அவர்கள் சுவாமிகளின் ஒரு நூலை எடுத்துக் கொண்டு வினாவிடை அமைப்பில் நூல் எழுதும்படி ஆலோசனை கூறியதால், **செக்கர்வேள் செம்மாப்பு முதல்காண்டம் - வினா விடை** என்ற இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

ஐயா அவர்களின் பெற்றோர் நடராஜன் - கனகாம்புஜம் தம்பதியர் பாம்பன் சுவாமிகளிடமும், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளிடமும் மிகுந்த பக்தி உடையவர்கள். வாரியார் சுவாமிகள் தான் ஐயாவிற்குச் சதாநந்தன் என்று பெயர் சூட்டியவர். பாம்பன் சுவாமிகள் தமக்கு அளித்த உபதேசத்தை வாரியார் சுவாமிகள் ஐயா அவர்கட்கு வழங்கி வாழ்த்தியவர். ஐயாவின் குடும்பத்தினர் கடந்த 40 ஆண்டுகட்கு மேலாக பங்குனி உத்திர விழாவைச் சிறப்பாக நடத்தி, பாம்பன் சுவாமிகள் பற்றிய நூல்களைச் சொந்த குடும்ப நிதி உதவியால் பதிப்பித்து வருகிறார்கள். இதுவரை அவர்கள் வெளியிட்டள்ள நூல்கள் 22 ஆகும். அவர்கள் ஆற்றும் சிவ புண்ணியச் செயல்கள் பலராலும் பெரிதும் பாராட்டுதற்குரியது. அவர்களின் குடும்பத்தினர்கள் அனைவரும் திருவருளால் எல்லா நலன்களையும் பெற்று நீடுழி சிறப்புடன் வாழ அங்கயற்கண்ணி உடனாய ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானை இறைஞ்சி வாழ்த்தி, அடியேனின் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

செக்கர்வேள் செம்மாப்பு முதல் காண்டம் 2003இல் வெளியிடப்பட்ட மூன்றாவது பதிப்பு நூல் அடியேன் இந்நூலின் வினாவிடை எழுத பெரிதும் உதவியது. பாடல்களைப் பதம் பிரித்து எழுதிய அமரர். திரு. ப. இராமன் அவர்கட்கும், உரை எழுதிய திரு. பி.மா. சோமசுந்தரனார் அவர்கட்கும் அடியேனின் நன்றி. மகாதோஜோ மண்டல சபையினருக்கும் நன்றி.

மிகக் குறுகிய காலத்தில் நூலைச் செவ்வனே அச்சிட்டு உதவிய சென்னை, இராயப்பேட்டை எஸ். எஸ். கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் நன்றி.

அடியேன் மேலும் பல நூல்கள் எழுதி வெளியிட சிவம் பெருக்கும் திருத்தொண்டு ஆற்றிவரும் சைவ ஆதீனங்களின் குருமகா சந்நிதானங்களின் ஆசிர்வாதங்களை வேண்டிப் பணிந்து வணங்குகின்றேன்.

அடியேன் நூல் எழுத உற்ற துணையாய் உதவுகின்ற கணவர் சித்தாந்தத் தொண்டர் மாமணி டாக்டர் செ. ஈ. சூரியமூர்த்தி (M.S. (USA) Ph.D., (USA) மேனாள் பேராசிரியர் சூரிய ஆற்றல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அவர்கட்கும் என்றும் நன்றியுடையேன்.

சிவநெறி வழி வாழ்ந்து அடியேனின் உள்ளத்தில் இளம் வயதிலேயே சைவ சமய உணர்வை ஊன்றி வளர்த்து ஆளாக்கி, அமரர்களாகி விட்ட பிறந்த வீட்டுப் பெற்றோரையும், புகுந்த வீட்டுப் பெற்றோரையும் நினைவு கூர்ந்து வணங்குகின்றேன்.

**கோமதி சூரியமூர்த்தி**

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## சுப்பிரமணியச் சொரூப இலக்கணம்

‘‘சுவ்வெனும் பறை சுத்த இன்ப ஆகும் ஓர்
அவ்வியத்த விண் ஆம் பிரமத்தினின்று
எவ்வம் இன்று ஒளிர்கின்ற மின்னே ணியம்
ஒவ்வும் கீர் சுப்பிரமணியம் என்று ஓர்தியால்’’

– பாம்பன் சுவாமிகள்

சு – சுகம் எனும் ஆனந்தம்

பிரமம் – கட்புலனாகாத இணையற்றற சிதாகாசம்

ணியம் – பிரமத்திலிருந்து வெளிபட்டு விளங்குகின்ற ஒளியே
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

# அணிந்துரை

''சித்தாந்த தொண்டர் மாமணி'' ''அறநெறி அறிஞர்'',
பேராசிரியர்

**முனைவர் செ.ஈ. சூரியமூர்த்தி,** M.Sc., M.S., Ph.D. (USA)

சூரிய ஆற்றல் துறை (ஓய்வு)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625 021.

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்ப தோர் மேனியாகி
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகமுய்ய.

''ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமங்கள் பாடி நாம் தெள்ளேனம் கொட்டாமோ'' என்ற மணிவாசகச் சொற்களுக்கேற்ப, பரம்பொருளான முதல்வன் உயிர்கள் மாட்டு கருணை கொண்டு பல்வேறு வடிவங்களில் வந்து நம்மை மூலமலங்களினின்றும் மீட்டு பேரின்ப முத்தியைக் கொடுக்கின்றான். அவ்வடிவங்களின் ஒன்றான

''செறியும் பரமசிவமாய் அறிவுக்கு அநாதியாய்''
(குமரகுருபரர் கந்தர் கலிவெண்பா)

இருக்கும் முருகப் பெருமானே பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளுக்கு காட்சிகொடுத்து, அருள் உபதேசம் செய்துள்ளார். முருகனாகிய செக்கர்வேள் செம்மானிடம் தாம் பெற்ற அருளனுபவத்தை கந்தனின் அடியார்களுடன் பகிர்ந்து கொள்கிறார். செக்கர்வேள்பால் பெற்ற ஆரா இன்னமுதை பக்தர்களுடன் பகிர்ந்து கொள்வதில் சுவாமிகள் இறுமாப்பும் பேரானந்தமும் அடைகிறார். இறையடியார்கள் இறைவன்பால் காட்டும் இறுமாப்பும் பக்தி வெளிப்பாடே.

திருநாவுக்கரசரும்

''இறுமாந்து இருப்பன் கொலோ
ஈசன் பல்கணத்து எண்ணப்பட்டு''

என்று திருஅங்கமாலையில் பெருமிதத்தோடு குறிப்பிடுகின்றார். சுவாமிகள் தான்பெற்ற

சிவானுபவங்களை ‘‘செக்கர்வேள் செம்மாப்பு’’ என்ற அருள்நூலில் திருப்பாடல்களாக பதிவு செய்கின்றார்.

நூற்று நாற்பது (140) பாடல்கள் கொண்ட சுவாமிகளின் ‘‘செக்கர்வேள் செம்மாப்பு’’ என்ற சுவாமிகளின் அருள் நூலை எல்லோரும் படித்து, தெளிவுபெறும் வகையில் முனைவர். கோமதி சூரியமூர்த்தி அவர்கள் இந்நூலுக்கு சிறிது மாறுபட்ட வழியில் விளக்கமளித்துள்ளார்கள். பொதுவாக பாடல்களுக்கு விளக்க வசன உரை அளிப்பதே மரபு, ஆனால் கல்விகற்பிக்கும் முறையில் ஒரு புதிய வழித்தடம் தோன்றியுள்ளது. உலகளாவிய கல்வியாளர்கள் இம்முறையைப் பின்பற்றி பெரும் வெற்றி கண்டுள்ளார்கள்.

உலகக் கல்வியாளர்கள் இம்முறையை ‘‘வடிவாக்கப்பட்ட பயிற்சி முறை’’ (Programmed Instruction) என்று அழைக்கிறார்கள். இம்முறையில் சொல்ல வேண்டிய செய்திகளை கேள்விகள் பதில்களாய் பகுத்துவிடுவார்கள். கேள்விகளும், பதில்களும் முழுத்தொடர்பு உடையவைகளாய் இருக்கும். கேள்வியைப் படித்தவுடன் ஒருவரின் சிந்தனை தூண்டப்படும். தொடர்ந்து வரும் பதில் கருத்து மனதில் ஆழமாகப் பதிவதாக கல்வி உளவியலாளர்கள் கண்டுள்ளனர். இந்த முறையில் படித்தால் கருத்துக்கள் தெளிவாகப் பதியுமாம்.

அம்மையார் அவர்கள் இந்த புதிய கற்பிக்கும் முறையை சுவாமிகளின் நூலுக்கு கையாண்டிருப்பதும் சுவாமிகளின் அருளாசியாகவே இருக்க வேண்டும். நான் இந்த கேள்வி-பதில் முறையில் ‘‘செக்கர்வேள் செம்மாப்பு’’ என்ற நூலை அணுகிய போது நல்ல தெளிவும் ஆழமும் கிடைத்தது. அம்மையார் அவர்கள் சைவ சித்தாந்தத்தை முறையாகக் கற்றவர்கள். சுவாமிகளின் நூற்களையும் பயின்று இதற்குமுன் பல நூற்கள் எழுதி வெளிவந்துள்ளன. இப்புதிய அணுகுமுறை ‘‘செக்கர்வேள் செம்மாப்பை’’ எளிதாக அறிந்து முருகப்பெருமானின் பேரருளில் மேலும் திளைக்க எம்பெருமானின் அருள் வேண்டிப் பணிவோடு விண்ணப்பிக்கிறேன்.

**முனைவர் செ.ஈ. சூரியமூர்த்தி**

# செக்கர்வேள் செம்மாப்பு முதல் காண்டம்
# வினா - விடை

1. **செக்கர்வேள் செம்மாப்பு நூலை அருளிச் செய்தவர் யார்?**

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

2. **அந்நூல் எத்தனையாவது மண்டலத்தைச் சேர்ந்தது?**

நான்காம் மண்டலம்

3. **செக்கர்வேள் செம்மாப்பு என்ற தொடரின் பொருள் யாது?**

செக்கர் – சிவப்பு நிறம்
வேள் – விருப்பம் அனைவராலும்
விரும்பப்படுபவன்
செம்மாப்பு – செம்மையாகிய வீறு

சிகப்பு நிறமும் உயிர்கள் மாட்டு விருப்பமும் உடைய முருகப் பெருமானை அடைதற்குரிய சிவ நெறியை உணர்த்தும் என பொருள்படும் என்பர்.

''செக்கர் என்பது சிவப்பு ஆம்
சிவணிய வேள் விருப்பும் ஆம் தக்க
இப்பெயரோன்
தக்கார் விரும்பு – செஞ்சோதி ஆவன்'' (செ.3)

செம்மாப்பு – செம்மையாகிய வீறு

செம்மை – நித்தமாய் தூயதாய் விகாரமின்றி ஒரே பெற்றியாய் உள்ள இறைவனின் தன்மை. வீறு – உயர்ச்சி, சிறப்பு, செவ்வேளின் சிறப்பைக் கூறுவது என்றும் பொருள் கூறலாம்.

4. **முதற்காண்டம் எத்தனை பிரிவு கொண்டது?**

சொரூப சம்பந்தவாரம், தடத்த சம்பந்தவாரம் என இரண்டு பிரிவுகள் கொண்டது.

5. **மொத்தம் எத்தனைப் பாடல்கள் கொண்டது.**

140 பாடல்கள் கொண்டது.

செய்யுள் 3 முதல் 74 வரை உள்ள பாடல்கள் சொரூப சம்பந்தமானவை.

செய்யுள் 75 முதல், 140 வரை உள்ள பாடல்கள் தடத்த சம்பந்தமானவை.

6. **சொரூப சம்பந்தம், தடத்த சம்பந்தம் தொடர்களின் பொருள் யாது?**

சொரூப சம்பந்தம் - ஒரு பொருளுக்கே உரிய தனிப்பட்ட இயல்புகள்

தடத்த சம்பந்தம் - பிறபொருள் சார்பு பற்றி அப்பொருளுக்கு உண்டாகும் இயல்புகள்.

6. **செக்கர் வேளுக்குரிய வேறு பெயர்கள் யாவை? பெயர்க் காரணம் கூறுக.**

**குகன்** - உயிர்களின் உள்ளக்குகையில் எழுந்தருளியிருப்பவன்

''பூதிசேர் உயிர்கள் உள்ளக்
குகைதொறும் பொருந்தும் ஆற்றால்
சோதிஆம் செக்கர் வேள்க்குத்
துகள் அறுகுகன் என்று ஓர் பேர்
ஆதிநூல் அறையும் அஃதே
அந்தர் யாமி என்னா
ஓதிஏய் வாய்மையைத் தான்
உணர்த்தும் என்று அறிவார் நல்லோர்''
(செய்யுள்-4)

8. **முற்கூறிய பாடலில் அமைந்துள்ள அந்தர்யாமி என்பதின் பொருள் யாது?**

அந்தர் - உள்ளே
யாமி - இயக்குபவன்
உயிர்களை உள்ளிருந்து இயக்குபவன் எனப் பொருள்படும்.

**9. கடவுள் என்ற சொல்லின் பெயர்க் காரணம் யாது?**

கடவுதல் என்பது செலுத்துதல் எனப் பொருள்படும். உயிர்களின் உள்ளத்தே நின்று செலுத்துவதால் கடவுள் என்று பெயர்.

‘‘செலுத்துதல் என்னும் சொல்லே
கடவுதல் எனச்செந் நூல்கள்
பலத்துடன் உரைக்கும் ஆற்றால்
பசுக்களின் உளத்தே நின்று
செலுத்துஉளம் ஆம் குகற்குக்
கடவுள் என திருப்பேர் ஒன்று எத்
தலத்தரும் இறும்பூது எய்தத்
தமிழினில் ஏய்ந்தது ஆமே.’’
(செ.5)

(கடவுள் என்ற சொல்லை கட+உள் என பிரித்து பொருள், இடம், காலம் இவற்றைக் கடந்து என்றும் உள்ள உள்பொருள் என்றும் பொருள் கூறுவர்)

**10. செக்கர்வேளைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை? அதற்குக் காரணம் என்ன?**

**பரன்**, யாவற்றையும் தன் பாரமேசுவர திருமேனியில் அடக்கிக்கொண்டிருக்கிறார். அதனால் **பரன்** என அழைக்கப்படுகிறார். நினைத்ததை முடிக்கும் ஆற்றலால் **சக்தி மான்** எனப்படுகிறார். இன்ன தன்மையினன் என்று கூறுதற்கு அடங்காத ஒளிப்பிழம்பினன் ஆதலால் **பரதேவு** (முழுமுதற் கடவுள்) எனப்படுகின்றார்.

‘‘அனைத்தும் உள் அடக்கும் வத்து
ஆகலின் பரன் என்று ஆவன்.
நினைத்தது முடிக்கும் ஆற்றால்
நிறை சத்திமான் என்று ஆவன்.
இனைத்து எனற்கு அமையாச் சோதி
ஆகலின் பரதேவு ஆவன்.

வினைத்தளை இல்லாச் செக்கர்
வேள் எனும் ஒருவன் தானே.''
(செ. 9)

நன்மைப் பொருளாகி பேரின்பமாகிய நலத்தை ஊட்டுவோனாகி உயிர்களைத் தன்பால் ஈர்க்கும் தன்மையனாதலால் **'சிவன்'** என்ற திருப்பெயரும், மலம் சாராத பண்பால் **'அமலன்'** என்ற பெயரும், எண்ணற்ற உயிர்கட்குத் தலைவனாதலால் **'பசுபதி'** என்ற பெயரும் உடையவன்.

''நன்மையாய் நலம் செய்வோன் ஆய்
நவைதப வசீகரிக்கும்
தன்மையால் சிவன் என் பேரும்
தளை மலம் இல்லான் ஆம் ஓர்
தொன்மை ஆல் அமலப் பேரும்
தொடர் உயிர்த் தலைவன் ஆய
வன்மையால் பசுபதிப் பேரும்
குகன் மருவும் மாதோ.''
(செ. 10)

குறைவற்ற தவத்தால் ஈசனின் சாரூபம் பெற்றவர்கள் தன்னைச் சூழ்ந்து வழிபட விளங்குதலால் **'மகேசன்'** ஆவான். செக்கர்வேள் உயிர்கட்கு இன்பத்தை வழங்குவதால் **'சம்பு'** என்ற பெயரைக் கொள்வான். அளவற்ற செல்வத்திற்குத் தலைவனாய் விளங்குவதால் **ஈசன்** என்ற பெயரும் உடையவன்.

''தகுசுகம் தனை உண்டாக்கிச்
சம்பு என் பெயரைக் கொள்வன்.
மிகும் அயிச்சுரிய கோ ஆய்
மிளிர்ந்து அருள் ஈசன் ஆவன்
தொகல் அறு தவத்தால் ஈசர்
ஆயினார் எல்லாம் சூழத்
திகழ்தலின் மகேசன் ஆவான்.
செக்கர்வேள் ஒருவன் தானே.''
(செ. 11)

செக்கர்வேள் அனைத்து உயிர்களுக்கும் நலத்தை வழங்குபவன். ஆதலால் **சங்கரன்** என்ற பெயரை உடையவன்.

''செக்கர்வேள் சுகமே நல்கும்
நீதியால் நிரந்தரம் சால்
சங்கரன் எனவும் நிற்பான்.''

(செ. 12)

நல்ல வேதத்திற்கு தலைவன். சிறந்த தேவன். ஆனந்த மயமான பரவசத்திலிருந்து தோன்றி ஒளிர்பவன். ஆதலால் **சுப்ரமணியன்** என்றும் அழைக்கப்படுகின்றார்.

''பிரமம் என் வடசொல் ஈண்டுப்
பெரிது என ஆகும் அந்தப்
பிரமம் அதாய் நிலாம் தே
பிரமணியப் பேர்க்கு என்றும்
உரியவன் ஆவன்., அப்பேர்
உடைச் சுரர்களுக்கும் தானே
பெரியவன் என்னவே சுப்
பிரமணியப் பேர் சார்வன்.''

(செ. 13)

**11. மேலே உள்ள செய்யுளில் பிரம்மம் என்ற சொல் என்ன பொருள் படும்?**

பிரம்மம் என்னும் வட சொல் இங்கு பெரியது என்று பொருள்படும்.

**12. ''அந்த மெய்ப்பொருளினைக் காணாது மேல் கதி அடையும் மார்க்கம் எப்படியினும் இன்று'' (செ. 15) என்பதன் கருத்து யாது?**

முருகப் பெருமானின் காட்சி பெறாது, அவன் திருவருள் இல்லாமல் வீடுபேறு, கூடும் நெறி எவ்வாற்றானும் இல்லை.

**13. சத்து, சித்து, ஆனந்தம் என்பதன் பொருள் யாது?**

மாறுதலடையாமல் என்றும் நிலைத்துள்ள உண்மைப் பொருள் சத்து. முற்றுணர்வுடைய வாலறிவன் ஆதலால் சித்து. வரம்பில் இன்பத்திற்கு ஒப்பற்ற வித்து ஆதலால் ஆனந்தம்.

‘‘சத்து எனும் உண்மையாலே
சத்தும் ஆய் அறிவே என்னும்
சித்தினை உடைமையாலே
சித்தும் ஆய் இன்பினுக்கு ஓர்
வித்து என இருத்தலால் ஆ
னந்தமும் ஆய் விளங்கும்
வத்து ஓர் செக்கர்வேள் பேர்
மரீஇய குக தே ஆகும்.’’

(செ. 16)

**14. சத்து, சித்து இரண்டிற்கும் உள்ள தொடர்பு யாது?**

பகலவனுக்கு வேறாகாத ஒளி போல பரனாகியசத்துப் பொருளை நீங்காது உள்ள கிழமைப் பண்பு சித்து. சத்து குணி (பண்பி) சித்து குணம் (பண்பு)

‘‘பரிதிவாய்க் கிரணம் போலப்
பர சத்தை நீங்காது உள்ள
உரிமையே சித்து ஆம்இந்த
உண்மையில் குணி சத்து ஆகும்
விரியும் நீர் சித்து ஆம் என்றே
விளக்கும் இந்நியாயத்தே சொல்
அரிய ஆனந்த இன்பும்
அவற்றினோடு அனாதி ஆமே.’’

(செ. 17)

**15. மேலே கூறிய பாடலில் ‘‘விரியும் நீர்’’ என்பதன் பொருள் யாது?**

குணியில் உள்ள பண்பு, நீர் – குணம்

**16. சத்து, சித்து ஆகிய இரண்டிற்கும் பண்பு, பண்புத் தன்மைகளை கூறிய பிறகு அவற்றோடு ஆனந்தமும் பொருந்துமாறு கூறல் எவ்வாறு அமையும்?**

பகலவனில் ஒளியே அல்லாமல் சூடு என்னும் ஒரு பொருளும், நிறைந்திருத்தல் போல இணையில்லாத இன்பமும் சத்து சித்துகளை விட்டு நீங்காது நிலவும் என்று அறிந்து கொள்ளலாம்.

''குண குணி சுபாவம் சொல்லிக்
கொண்டபின் ஆனந்தம் தான்
அணவு உற கூறல் எங்ஙன்
அமையும் என்றால் அம் மாக
மணியினில் ஒளியே அன்றிச்
சூடு ஒன்று மல்குமா போல்
இணை அறும் இன்பு நீங்காது''
இருக்கும் என்று அறியலாம் ஆல்.''
(செ. 18)

**17. பிரம்மம் நிர்க்குணம் என்று கூறுவதன் பொருள் யாது?**

மாயையின் குணங்களாகிய சத்துவம், ராசதம், தாமதம் என்னும் மூன்றும் இறைவனுக்கு இல்லை என்பதே நிர்க்குணம் என்ற சொல் உணர்த்தும்.

**18. பிரம்மத்திற்குரிய சிற்குணம் எத்தனை?**

சிற்குணம் எட்டாகும்.

''நிர்க்குணப் பிரமம் என்று
நிகமம் நன்கு ஓத, இங்கே
சிற்குணம் கடவுட்கு ஓதல்
என் எனில், ''செகம் ஆம் மாயை
முக்குணம் இன்மையே அந்
நிர்குண முடிபு ஆம்: ஈதே
சிற்குணம் அதுதான் எட்டாய்த்
திகழும்'' என்று ஓதும் மெய்ந்நூல்.''
(செ. 21)

**19. இறைவனுக்குரிய எட்டு குணங்கள் யாவை?**

பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, முற்றும் உணர்தல், வரம்பில் இன்பமுடைமை, தூய உடம்பினாதல், தன் வயத்தினாதல், இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், இயற்கை உணர்வினாதல் என எட்டு குணங்களாகும்.

''பேரருள், அனந்த சக்தி,
பேரறிவு, அளவு இல் இன்பம்,
சூர் அறுவிசுத்த தேகம்
சுதந்திரம், பாச நீக்கம்
தாரகம் அனாதி முத்தத்
தன்மையே, அவ் ஓரெட்டும்
சீர் அணை இவை இல் வத்துத்
தெய்வமாய் இலகாது என்றும்.''
(செ. 22)

**20. மேலே கூறிய பாடலில் அனந்த சக்தி, விசுத்த தேகம், சுதந்திரம், பாச நீக்கம், அனாதி முத்தம் முதலிய சொற்களுக்குப் பொருள் யாது?**

அனந்த சக்தி – முடிவிலாற்றல் உடைமை
விசுத்த தேகம் – தூய உடம்பினாதல்
சுதந்திரம் – தன் வயத்தினாதல்
பாச நீக்கம் – இயல்பாகவே பாசங்களை நீங்குதல்
அனாதி முத்தம் – இயற்கை உணர்வினாதல்

**21. எண் குணங்கள் இறைவனுக்கு உண்டு என்பதற்கு உறுதிமொழி யாது?**

எந்த குணமும் இல்லாமல் எந்தப் பொருளும் இராது. எந்தப் பொருளும் இல்லாமல் எந்தக் குணமும் இராது. ஆகையால் முற்கூறிய எட்டு குணங்களும் இறைவனுக்கு உண்டு என்பது உறுதியாகும்.

''யாதொரு குணம் இல்லாமே
யாதொரு பொருள் இராதால்

யாதொரு பொருள் இல்லாமே
யாதொரு குணம் இராதால்
ஆதலின் கிளந்த எட்டும்
அப்பரம் பொருட்கு உண்டு''
(செ. 23)

**22. முருக பெருமானுக்குரிய குணங்கள் ஆறு என்று கூறுவது எப்படி?**

எண் குணங்களில் பேரருள் உடைமையில், தூய உடம்பினாதலும், இயற்கை உணர்வினாதலில் இயல்பாகவே பாசங்களை நீங்குதலையும் அடக்கிக் கூறினால் குணங்கள் ஆறாகும்.

''ஏர் உறமேலே சொற்ற
எண் குணங்களிலே ஈறுஇல்
பேர் அருள்தனில் விசுத்தப்
பேர் உடம்பினையும் ஆதிக்
கீர் அணையா அனாதி
முக்தம் உள் பாசக்கேடு ஆம்
நீரையும் அடக்கிக் கூறின்
நிகழ் குணம் ஆறும் ஆமே''.
(செ. 24)

**23. இறைவனுக்குரிய குணங்கள் மூன்றாக கூறுவது எதை உணர்த்தும்?**

சத்து, சித்து, ஆனந்தம், எண் குணங்களில் தன்வயத்தினாதல், தூய உடம்பினன் ஆதல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், அளவில் ஆற்றல் என்ற நான்கும் சத்தின் பால் அடங்கும். இயற்கை உணர்வினன், முற்றும் உணர்தல், பேரருள் உடைமை என்ற மூன்றும் சித்துவின் பால் அடங்கும். வரம்பில் இன்பமுடைமை, ஆனந்தம் என்பதில் அடங்கும். சிலர் பேரருள் உடைமையை ஆனந்தம் என்பதில் அடக்கிக் கூறுவர். அது பொருந்தாது. ''அருளது சக்தியாகும் அரன் தனக்கு'' ''சக்திதன்

வடிவோதன்னில் தடையில்லா ஞானமாகும்'' என்ற சிவஞான சித்தியார் வாக்குகளால் (செ. 239, 82) பேரருள் உடைமை சித்தின்கண் அடங்கும் எனலாம்.

**24. கதிரவன் – கதிர், சிவம் – சக்தி ஒப்புமை யாது?**

தன்னை விளக்கும்பொழுது கதிரவன் என்றும், பொருட்களை மாந்தர் விழிக்கு விளங்கச் செய்யும் பொழுது கதிர் என்றும் கூறப்படுவது போல இறைவன் தன்னிலையில் சிவன் என்றும், உலக உயிர்களோடு தொடர்பு கொள்ளும் நிலையில் சக்தி என்றும் கூறப்படுவான்.

| <u>உவமை</u> | <u>பொருள்</u> |
|---|---|
| கதிரவன் | இறைவன் |
| கதிர் | சக்தி |

''வெயிலவன் விடயம் எல்லாம்
விளக்குஉழிக் கதிராய்த் தன்னைக்
கயவுஉற விளக்கு ஞான்று
கதிரவனாய் நின்றால் போல்
செயிர் அறுபரனும் வேறு
நோக்கு உழிச் சித்தாம் சத்திப்
பெயர்கொள்வன், நோக்கா ஞான்று அப்
பெரும் சக்திமானாய் நிற்பன்.''
(செ. 25)

**25. இறைவன் செவ்வேள் மும்மூர்த்திகளுக்கும் மேலானவன் – தலைவன் என்பதற்குச் சான்று யாது?**

''உலகுசெய் பிரமனைத்தான்
உண்டு செய்வோனாய்க் காக்கும்
தலைவனைக் காப்போன் ஆகிச்
சகம் எலாம் அழிப்போனுக்கும்
தலைமையில் நிற்பான் ''ஆனந்
தம் பிரமம் காண்'' என்றே
அலறு அரு மறைக்கே அத்தம்
ஆம் ஒரு திருச்செவ்வேளே''
(செ. 26)

**26. ''யாவையும் அழிப்போன் தானே யாவையும் தருவோன்'' - என்பதின் கருத்து யாது?**

மகாசங்காரம் செய்யும் மகாருத்ரன் உலகைத் தோற்றி வைப்பவன் ஆவான். ''ஒடுங்கின சங்காரத்தின் அல்லது உற்பத்தியில்லை'' என்றார் மெய்கண்ட தேவர். சங்காரகாரனாகிய இறைவனை (மகாருத்ரர்) உலகிற்கு நிமித்தகாரணர் என்று சிவஞானபோதம் முதல் சூத்திரம் கூறுகிறது.

**27. திருமால், பிரம்மன் முதலியோர் முதற்கடவுள் ஆகார் என்பதற்குக் காரணம் யாது?**

பிரம்மன் படைப்பு தொழிலை மட்டும் செய்வான். திருமால் காத்தல் தொழிலை மட்டும் செய்வான். வலிமை மிக்க அழிப்புத் தொழிலுக்கு வேண்டும், நெற்றிக்கண் தீவண்ணத் திருமேனி அவர்கள் இருவருக்கும் இல்லை.

''உலகு அடல் அழிக்கும் மேலோன்
உண்டு செய் பிரமன் மால் என்
று இலகு இருவருளே யாரும்
இருக்க ஒணாதோ என்றால் அப்
பல அழிவினுக்காம் நெற்றிக்
கண் கனல் படிவம் ஆதி
நிலவிட வேண்டும் அந்
நெடிய மால் பிரமனுக்கும்''
(செ.28)

**28. மும்மூர்த்திகள் யாவர்?**

பிரம்மன், திருமால், உருத்திரன். பிரம்மன் படைத்தல் தொழிலை மட்டும் செய்வான். திருமால் காத்தல் தொழிலை மட்டும் செய்வான். குணிஉருத்திரன் அழித்தல் தொழிலை மட்டும் செய்வான்.

**29. இம்மூவரும் பசுவர்க்கத்தினர் என்பதை உணர்த்தும் சொற்றொடர் யாது?**

''மூவரோடு சித்திகொள் அமரர் எல்லாம்
சீவரே ஆவர்'' (செ. 31)

''பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசம் மூன்று உண்டு''

என்று பிரமன் முதலானவர்கள் பசுவர்க்கத்தினர் என்று திருமூலரும் கூறுகின்றார். (திருமந்திரம் - 2406)

**30. செவ்வேள் - விச்சுவன், விச்சுவாதீதன் என்று கூறப்படக் காரணம் என்ன?**

விசுவம் என்பது உலகம். உலகப்பொருள்கள் முழுவதுடன் நீக்கமற நிறைந்திருக்கும் தன்மையால் விச்சுவன் எனப்படுவான். எங்கும் படர்ந்துள்ள வெளி போல் இருக்கும் தன்மையால் விச்சுவாதீதன் எனப்படுவான்.

(இறைவன் - உலகைக் கடந்து நிற்கும் நிலையில் விச்சுவாதீதன் எனப்படுவான் என்பதே சித்தாந்தம்)

''உடல் இடை உயிரைப் போல
உலகு எனும் விசுவம் தன்னில்
இடர் அற நிறைந்த நீரான்
விச்சுவ னாவன் எங்கும்
படர்வெளி போல் ஆம் பண்பின்
விச்சுவா தீதன் ஆவன்
தொடரு முக்காலம் தோற்றும்
தொடக்கும்இலா அவ் வேளே. (செ. 32)

**31. இறைவன் வேறு, உயிர் வேறு என்பதை சுவாமிகள் எவ்வாறு உணர்த்துகின்றார்?**

உடம்பில் பொருந்தி இருக்கும் உயிர் அவ்வுடம்பு அன்று. அவ்வுடம்பும் உயிராவதன்று. அதுபோல சிற்றறிவு உடையோர் உயிர்களில் எஞ்ஞான்றும் உடங்கு இயைந்திருக்கும் இறைவன் சிற்றறிவுடைய உயிர்கள் ஆகான். அவ்வுயிர்களும் இறைவன் ஆகா.

''அணவு உடல் இருக்கும் ஆவி
அவ் உடல் ஆவது இன்று அவ்

அணவு உடல் அதுவும் ஆவி
ஆவது இன்று இவ்வாறு அற்ப
உணர்வு உடை உயிரில் என்றும்
உடங்கு இயைந்து இருக்கும் தேவுஅவ்
உணர்வு உடை உயிரும் ஆகாது
உயிரும் அத் தேவு ஆகாதே''.
(செ.33)

**32. இறையன்புடைய உயிர் முக்தியில் பரம்பொருள் ஆகாதா?**

ஆகாது. முக்தியில் உயிர் சிவப் பேரின்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும்.

**33. சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் எவை? முப்பொருள்களிடையே உள்ள தொடர்பு யாது?**

பதி, பசு, பாசம். பதி (இறைவன்), பசு (உயிர்), பாசம் (ஆணவம், கன்மம், மாயை), இவற்றுள் ஆணவ மலம் அநாதியாய் உயிரைப் பிணித்துள்ளது. முப்பொருட்களுள் பதி வியாபகப் பொருள். பசு வியாத்தி. மலம் வியாப்பியம்.

''வெறி இல்ஒன்று ஆன தெய்வம்
வியாபகப் பொருள் ஆம். காட்ட
அறி உயிர் வியாத்தி ஆகும்
அகன்மலம் வியாப்பியப் பேர்
உறும், உயிர்தெய்வம் தான்பேர்
உணர்வு உளது. உயிர்தான் அற்ப
அறிவு உளது. அதன் மலம் தான்
அறிவு இலாப் பொருளது ஆம். ஆல்''
(செ.38)

**34. இத்தொடர்பை விளக்க சுவாமிகள் கூறும் உவமை யாது?**

உப்பு நீரை உவமையாக கூறுகின்றார்.

உப்பு நீர் (கடல் நீர்) தங்கியுள்ள பரந்த வெளி

**வியாபகம்**. அதில் தங்கியுள்ள நீரே **வியாத்தி**. அந்நீரில் கலந்துள்ள உப்பே **வியாப்பியம்**.

‘‘உப்பு அறில் வதிவதற்கா
உறுவெளி இடமே ஒக்கும்
ஒப்பு உறு வியாபகம் தான்
உறையும் அந்நீரை ஒக்கும்
செப்பிய வியாத்தி அந்நீர்
சேரும் உப்பு அதனை ஒக்கும்
துப்பு அறு வியாப்பியம் தான்
தொல்கடல் நியாயம் மூன்றும்.’’
(செ.39)

கடல்வெளி போன்றது சிவனது வியாபகம். கடல் வெளியில் அடங்கியுள்ள நீர் போன்றது, சிவ வியாபகத்தில் அடங்கியுள்ள ஆன்மா. நீரைப் பற்றியிருக்கும் உப்புப் போன்றது, அவ் ஆன்மாவைப் பற்றி இருக்கும் ஆணவமலம்.

**36. வியாபகம், வியாத்தி, வியாப்பியம் பொருள் யாது?**

வியாபகப் பொருள் - எங்கும் நிறைந்த பொருள்.
வியாத்தி - நிறைபொருள் முழுவதும் பரவியுள்ளது.
வியாப்பியம் - ஒடுக்கப்பொருள்

**37. செய்யுள் 41-ல் அமைந்துள்ள அதிவிருத்தி, நூன விருத்தி, துல்லிய வியாத்தி - பொருள் யாது?**

அதிவிருத்தி - வியாபகம்
நூன விருத்தி - வியாப்பியம் (நூனம் குறைபாடு)
துல்லிய வியாத்தி - அதிகமும் நூனமும் இல்லாத நிலை

‘‘அதிகம் என் விருத்தி தான் வி
யாபகம் ஆகும் நூனம்
பதி ஒரு விருத்தி தான் வி
யாப்பியப் பனுவல் சாரும்;
அதிகமும் நூனமும் தான்
இல் சமம் துல்லியப்பேர்

பதி ஒரு வியாத்தியாம்; நூ
னம் குறைபாடாம்; அன்றே
(செ.42)

**38. செவ்வேள் பரமன் எல்லா இடங்களிலும் ஜோதிமயமாக விளங்க உயிர்கள் அஞ்ஞானம் பெற்றிருப்பது எவ்வாறு?**

குற்றமில்லாத சூரியனின் ஒளியானது குருடனுக்கு விளங்காமல் இருத்தல் போல ஆணவத்தால் மூடப்பட்ட உயிர்கட்கு இறைஒளி புலப்படாது.

''சோதி ஆம் செக்கர் வேள்தான்
எங்கணும் சுடரும் ஆயின்
சாதி ஆருயிர்க்கு அஞ்ஞானம்
சாரும் ஆறு எவன்கொல் என்னில்
கோது இலாப் பரிதி அம்கேழ்
குருடனுக்கு இலாமை போல் என்று
ஓதிசால் விழிதான் உள்ளார்
உரைத்திடுவார்கள் மன்னோ.''
(செ. 44)

**39. செய்யுள் 46-ல் அமைந்துள்ள பரமுத்தர், ஜீவன்முத்தர், பெத்தர் பொருள் யாது?**

பரமுத்தர் - மீண்டும் பிறவாநிலை தரும் மேலான முத்தி பெற்றவர்.

ஜீவன்முத்தர் - தூலஉடம்பு உள்ள போது முக்தி அனுபவம் உடையவர்.

பெத்தர் - உலகப் பற்று உடையவர்.

**40. முற்கூறிய மூவருக்கும் சுவாமிகள் கூறும் உவமைகள் யாவை?**

பரமுத்தர் இரவில் பார்வை பெறாது பகலில் பார்வை பெறும் புறா ஒப்பர். சிவத்தையும் உலகையும் காணும் ஜீவன்முத்தர் பகலிலும் இரவிலும் பார்வையுடைய பூனையையும், உலகம் ஒன்றையே நோக்கும்

பெத்தர் பகலில் பார்வை பெறாது இரவில் பார்வை பெறும் கூகையை ஒத்தவர் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

சகம் இலாச் சிவானுபூதி
சார் பரமுத்தர், மாசு ஆம்
அகம் இலாச் சிவ சகங்கள்
அறிதிறச் சீவன் முத்தர்
சுகம் இலாச் சகம் காண்பெத்தர்
எனச் சொல் இம்மூவர் அல்லின்
முகநிலாப் புறவு, பூனை
முன்சொன கூகை, ஒப்பார்

(செ.46)

**41. உயிர் பசு எனக் கூறப்படுவதற்குக் காரணம் யாது?**

உணரும் அறிவை ஆணவ மலத்தால் இழந்து மலத்தால் கட்டப்பட்ட உயிர் பசு எனப்படும்.

''சுடுதலை ஆணவத்தின்
துணி அறிவு இழந்து கட்டுப்
படுதலை உடைய ஆன்மாப்
பசு அணு ஆம்''

(செ.47)

**42. உயிர் அணு என்று சொல்லப்படக் காரணம் யாது?**

ஆணவமலம் உயிரின் அறிவை சிறுமைப்படுத்துவதால், அணு எனப்படும்.

**43. கடல்நீருக்கு குளிர்ச்சி இயல்பாவது போல் உயிர்களின் இயல்பு யாது?**

உயிர் அறிவுப் பொருள்.

''பொலிகடல் நீரில் தட்பம்
போல் உயிர் தன்னில் ஞானம்''

(ஞானம் - அறிவு) (செ.48)

**44. ஆணவம் உயிரை அனாதியாக பந்தித்துள்ளது என்பர். அப்படியானால் ஆணவம் உயிரின் குணமா? குற்றமா?**

ஆணவம் உயிர்களின் குணமாயின், சிவஞானம் அதனை அழிக்கும் போது குணியாகிய உயிரும் அழிந்துபடும். ஆனால் உயிர் அழியாத நித்தப் பொருள். எனவே ஆணவம் உயிரின் குணமன்று. குற்றம்.

**45. ஆணவ மலம் உயிர்களின் குற்றம் என்பதை உதாரணத்துடன் விளக்குக?**

கடல்நீருக்கு உப்பு இயல்பாகாத குற்றம் ஆகும். அதுபோல பிறந்து இறந்து உழலும் உயிர்கட்கு ஆணவ மலமானது அநாதியே ஏற்பட்ட குற்றம் ஆகும்.

‘‘......... கடல் நீரினுக்கு உப்பு
இயல்பு அலாக் குற்றம் ஆமாறு
அலை உயிர்க்கு அழுக்கும் குற்றம்
ஆகுமே அனாதி என்ன’’ (செ.48)

**46. முற்கூறிய பாடல் தொடர்களில் அழுக்கு என்பது எதைக் குறிக்கும்?**

அழுக்கு என்பது ஆணவத்தைக் குறிக்கும்.

**47. இந்த சமவாயம் எப்படி அழைக்கப்படும்? நித்திய சம்பந்தம்**

தாதான்மியம் என்று அழைக்கப்படும்.

‘‘அச் சமவாயம் தாதான்
மியம் என ஆகும், அத்தை
உச்சித சத்த சம்பந்தம்
எனவும் உரைத்தல் சாலும்’’

(செ.49)

**48. செய்யுள் 49இல் அமைந்துள்ள சையோகம் என்ற சொல்லிற்குப் பொருள் யாது?**

சையோகம் என்பது ஒன்றனோடு மற்றொன்று கூடும் கூட்டம்.

‘‘மிச்சைஇல் சையோகம் தான்
ஒன்று மற்றொன்றில் மேவு
நிச்சயம் ஆம்’’

(செ.49)

**49. எதனது ஒளியால் நம் கண்கள் உலகக் காட்சியைக் காண்கிறது?**

பகலவன் ஒளியால் உலகக்காட்சியைக் காண்கிறது.

**50. அதுபோல் யாருடைய ஞானத்தால் உயிர்கள் அறிவு விளக்கம் பெறுகின்றது?**

சிவனுடைய ஞானத்தால் உயிர்கள் அறிவு விளக்கம் பெறுகின்றது.

‘‘பகலவன் ஒளியால் நோக்கும்,
பண்புடை விழியைப் போலச்
சுகசிவன் ஞானத்தானே
துலங்கு அறிவு உயிர்க்கு எஞ்ஞான்றும்’’

(செ. 50)

**51. வினை என்பது என்ன?**

உயிர்களின் அகமனவிருத்தியால் செய்யும் செயல் வினையாகும்.

**52. உயிர்கள் நல்வினை தீவினைகளால் எதை அடையும்?**

நல்வினையினால் சொர்க்கமும், தீவினையால் நரகமும் அடையும்.

‘‘அம்மன விருத்தி நன்றும்
தீதும் ஆம் அழகுஆர் சொர்க்கம்
வெம்மை செய் நரகம் ஈயும்’’

(செ.51)

**53. உயிர்கட்கு வினைப்பயன்களை ஊட்டுவது யார்?**

இறைவன் ஊட்டுகிறான்.

**54. இறைவனை யாருக்கு ஒப்பிடுகிறார்?**

பூமியை ஆளும் அரசனுக்கு ஒப்பிடுகிறார்.

‘‘விமலன் ஆண்டு அவணி ஆளும்
செம்மலை மான நீதி
செலுத்துவோன் ஆகி நிற்பன்’’
(செ.51)

**55. இறைவனை அரசனுக்கு ஒப்பிடக் காரணம் யாது?**

அரசன் தவறு செய்யும் மக்களுக்கு நீதி முறைப்படி தண்டனை கொடுப்பான். அறவழியில் நடப்பவர்களுக்கு நன்மையும் செய்வான். அதுபோல இறைவன் மானிடர்களின் நல்வினை தீவினை செயல்களுக்கேற்ப இன்பமும், துன்பமும் அருளுவான்.

**56. வீடுபேறு அடைவார் யார்?**

தமது மன விருத்தியை மாளச் செய்பவர், உறுதியாக வீடு பேறு அடைவர்.

‘‘தம்மன விருத்தி நீத்தோர்
சரதமா வீடு சார்வர்.’’

(சரதமா – உண்மையாக) (செ.51)

**57. சிவன் செயல், சீவன் செயல் எதை ஒக்கும்?**

சூரியனின் ஒளியை சிவத்தின் ஒளி ஒக்கும். அவ்வொளியால் பார்வைபெறும் கண்ணை சீவர்களின் செயல் ஒக்கும்.

‘‘செஞ்சுடர் ஒளியைப் போல் ஆம்
சிவச் செயல், ஒளியால் நோக்கு
விஞ்சுகண் போல் ஆம் சீவர் செயல்’’
(செ.52)

**58. 52 ஆம் செய்யுளிலுள்ள சஞ்சிதம், பிராரத்தம் என்ற சொற்களின் பொருள் யாது?**

சஞ்சிதம் – பழைய வினை. பல பிறவிகளில் செய்த வினைகளின் தொகுதி

பிரார்த்தம் – ஊழ் வினை, நுகர் வினை

**59. மனவிருத்தியை வினைக்குக் காரணம் என்பதற்கு சுவாமிகள் கூறும் உதாரணம் யாது?**

சூரியனின் ஒளியால் காணும் திறம் பெற்ற இருவர் ஒரு சாலையில் சென்று கொண்டிருக்குங் காலை ஆங்கொரு பக்கலில் திருந்த உடுக்கக் கருதி ஆடையைக் களைந்து கொண்டிருந்த ஒரு பெண்ணின் உறுப்புகளை ஒருவன் வேட்கையோடு பார்க்கவும், மற்றவன் தன் கண்களை மூடிக்கொள்ளவும் சூரியன் செய்ய மாட்டான். அவ்வாறு செய்யவைப்பது அவரவர் மனவிருத்தியே ஆகும்.

''ஆதவனால் விழிப்பு உண்டாகிய
இருவர் தாம் ஓர்
பாதையில் போங்கால் ஆடை
பக்கலில் களை ஓர் பெண்ணை
மாதரில் ஒருவன் நோக்க,
மற்றவன் நோக்கான் ஆக
ஆதவன் செய்யான், செய்வது
அவர் மனவிருத்தி யேயாம்''
(செ.53)

**60. நல்வினை, தீவினையாகிய குற்றம் யாருக்குக் கிடையாது? ஏன்?**

இறைவன் ஆட்ட ஆடுகின்ற அறிவற்ற உயிரற்ற பொருளுக்கு நினைப்புக்கு இடமாகிய மனவிருத்தி இல்லாமையால் நல்வினை, தீவினையாகிய குற்றம் கிடையாது. ஆண்டவனாகிய குகப்பரமனுக்கும் இல்லை. உயிர்களுக்கே உண்டு என்பர்.

''இன்னணம் செயல் இரண்டும்
இகல் அறத் தேரவல்லார்

அன்னவன் ஆட்ட ஆடும்
அசேதனம் ஆம் சடத்திற்கு
உன்னிடும் மன விருத்தி
இன்மையால் உபய கன்மம்
என நசை இலை, ஆள்வோற்கும்
இலை நசை, உயிர்க்கு ஆம் என்பார்''
(செ.54)

**61. மேலே கூறிய பாடலில் அமைந்துள்ள அசேதனம், சடம், உபய கன்மம் என்பதற்குப் பொருள் யாது?**

அசேதனம் - அறிவிலாப் பொருள்
சடம் - அறிவற்றப் பொருள்
உபய கன்மம் - நல்வினை, தீவினையாகிய இருவினைகள்

**62. யாவும் உயிர்க்கு உயிராகிய சிவச்செயலே உயிருக்கு ஒரு சுதந்திரமும் இன்றி என மெய் நூல்கள் கூறுவது ஏன்?**

உயிர்ச்செயல் அடங்கி உள்ளம் மெய்ப்பொருள்பால் நிற்க வேண்டி அவ்வாறு கூறுகின்றது.

**63. இறைவன் - உயிர் கலப்பு எத்தன்மையது?**

உயிருக்கு உயிராகிய இறைவனும் உயிரும் பருஉடம்பும் நுண்ணுடம்பும் அல்லாத மூல (காரண) உடம்பும் உயிரும் கலந்து நிற்கும் சையோகமாகும்.

''உயிர்க்கு உயிர் என்னும் தேவும்
உயிருமே ஏய்ந்து நிற்றல்
வயச் சமவாயம் அன்று,
மற்று அது தூல சூக்கப்
பெயர்த் தனு அலாத மூலத்
தனுவும் ஆன்மாவும் பின்னும்
வியப்பினில் அறை ஓர் சையோ
கச்சொலை மேவும் ஆல் ஓ''
(செ. 56)

**64. முற்கூறிய பாடலில் அமைந்துள்ள சையோகம் என்பதற்குப் பொருள் யாது?**

சையோகம் என்பது இரண்டறக் கலத்தல் என்று பொருள்படும்.

**65. சையோகம் என்பதற்குச் சுவாமிகள் கூறும் உவமைகள் யாவை?**

சையோகம் என்பது பாம்பின் கண்ணில் காதும் ஒளியுடைய விழியும், யானையின் தும்பிக்கையில் மூக்கும், கையும், வெளவ்வால் உடம்பால் பறவையும் விலங்கும் விளங்குவதை ஒக்கும். அன்றியும் உயிரும் மலமும் கலந்திருப்பதையும் ஒக்கும்.

''இன்னும் அச் சையோகம் தான்
ஏர் அராக் கண்ணிற் காதும்
பொன் உறு விழியும், யானைப்
புழைக்கையில் மூக்கும் கையும்,
பல்நிகழ் வாவல் மெய்யில்
பறவையும் விலங்கும் ஆக
மன் இரு வடிவை ஒக்கும்
உயிரும் அம் மலமும் ஒக்கும்.''
(செ. 57)

வாவல் - வெளவால்

**66. செய்யுள் 61இல் பெத்தகேவலம், முத்திக் கேவலம், துல்லியவியாத்தி எனும் தொடர்களின் பொருள் என்ன?**

பெத்தகேவலம் - பந்தத்தில் தனிநிலை
முத்திக்கேவலம் - முத்தியில் தனிநிலை
துல்லிய வியாத்தி - வியாபகப பொருட்களில் வியாபித்து அப்பொருளே எனப் படாமல் அதனை ஒத்து நிற்கும் ஓர் இயல்பு.

**67. முத்தியில் உயிர் இறைவனோடு கூடும் கூட்டம் எத்தன்மையது?**

முத்தியில் உயிர் மலப் பிணிப்பு நீங்கி வாலறிவனோடு கூடுதல் காண்பான் காட்சி, காட்சிப் பொருள் என்னும் முப்புடியில்லாத ஐக்கியமாகும்.

‘‘இப்படி உயிர்தன் கண்டிப்பு
இகந்து உயர் அறிவில் கூடல்
முப்புடி இலாத ஐக்கம்’’
(செ.62)

**68. முற்கூறிய பாடல்தொடர்களில் ஐக்கம் என்பதற்குப் பொருள் யாது?**

ஐக்கம் - ஐக்கியம் - பிரிவில்லாக் கலப்பு

**69. அத்துவிதம் - பொருள் என்ன?**

ஒன்றும் அன்று, இரண்டும் அன்று, இரண்டறக் கலத்தல்.

**70. அத்துவிதம் பயிலும் வகை எத்தனை?**

மூன்றாகும்.

‘‘........அத்துவிதம் ஆம் அச்
சொல் உரை பேசின் ஏகம்
துவிதம் அன்று என ஆம், அஃதும்
செல் அதர் மூன்று கூறாய்த்
தெரிந்திடத்திற்கு அயிர்ப்பு இன்று அன்றே’’
(செ.63)

**71. அத்துவிதம் பயிலும் மூவகை யாவை?**

பெத்தாத்துவிதம் - உயிர்களின் பெத்த நிலையில் இறைவன் அவ்வுயிரோடு கலந்து விளங்குவது.

பாவனாத்துவிதம் - உயிர்கள் இறைவனை வழிபடும் போது கொள்வது.

சுத்தாத்துவிதம் - பக்தியால் முத்தியில் அவனைக் காணும் நிலை.

‘‘ஆதியில் அனாதி - ஆம் - பெத்
தாத்துவிதம், சே அண்ணல்

பாதம் அது உபாசிப்பான் கொள்
பாவனாத்துவிதம், தேவைக்
காதலிற் காண்டற்கு ஏய் சுத்
தாத்துவிதம், காண் என்றே
ஓதல்இம் மூன்றுமே மேல்
உரைத்த முக்கூறாம் அன்றே''
(செ.64)

**72. முத்தியில் பாசம் (மலம்) உண்டா?**

உண்டு. உள்ளது போகாது என்பது உண்மை. கதிரவன் முன் இருளானது எப்படி இருந்தும், இல்லாதது போல் இருக்குமோ, அதுபோல பாசம் கெடாமல் சக்தி கெட்டு நிற்கும் (சக்தி – வலிமை)

**73. சிவன் கல்லால் நிழலின் கீழ் சனகாதி முனிவர்களுக்கு எவ்வாறு உபதேசம் செய்தார்?**

வாயினால் சொல்லாமல், சின் முத்திரை மூலம் அத்துவிதத்தை விளக்குகிறார்.

**74. சின்முத்திரையின் விளக்கம் யாது?**

சுட்டுவிரல், பெருவிரலின் அடிப்பாகத்தை ஏனைய மூன்று விரல்களும் நீக்கித் தொட்டுக் கொண்டிருக்கும். பெருவிரல் பரமான்மாவையும், சுட்டு விரல் சீவான்மாவையும், ஏனைய மூன்று விரல்கள் மும்மலங்களையும் குறிக்கும். ஆன்மா மும்மலங்களின் நீங்கி சிவனை அடைதல் வேண்டும்.

**75. சுவாமிகள் கூறும் இறை இயல்புகள் யாவை?**

பெரிய பொருட்கள் யாவற்றிலும் பெரிய பொருள். சிறிய பொருட்கள் யாவற்றிலும் சிறிய பொருள். அரியவற்றில் அரியவன், ஊர் பெயர் இல்லாதவன். விருப்பு வெறுப்பு அற்றவன். ஆணல்லன், பெண்ணல்லன், பேடுமல்லன், தூநெறிக்கும் தூநெறியாய் நிற்பவன். தன்னைப் புகழும்

அன்பர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பவன். (இஃது இறைவனின் சொரூபநிலை)

''பெரிதிலும் சிறிதிலும் தான்
பெரிதும் ஆய்ச் சிறிதும் ஆகி
அரிதிலும் அரிதாம் ஊர் பேர்
அணை பிறப்பு இறப்பு வேட்கை
திரிஉரு அரு ஆண் பெண் என்
திறநிறம் இலதாய்த் தூய்தாய்ப்
புரிவினர்க்கு இன்பாய் நிற்கும்
பொருவு அற நிறை அத்தெய்வம்''
(செ.72)

**76. யாருக்கு வீடு பேறு கூடுவதில்லை?**

செக்கர் வேளாகிய முதல்வனை நீத்து உழலுபவர்களுக்கு வீடுபேறு கூடுவதில்லை.

''முத்தி மெய்ம்மார்க்கம் இம்மேல்
முதல் இழந்து உழல்வார்க்கு இன்றே''
(செ.73)

''அவன் அன்றி ஊர்புகுமாறு அறியேனே''

(திருமந்திரம் - 6) என்று திருமூலரும் கூறுகின்றார்.

**77. சொரூப நிலை என்றால் என்ன?**

பரம்பொருளின் உண்மை இயல்புகளை விளக்குவதே சொரூபநிலையாகும்.

**78. தடத்தம் என்பதின் பொருள் என்ன?**

மெய்ப்பொருள் உயிர்களின் பொருட்டு பருவுருவங்கள் எடுத்து வருவது.

**79. 76ஆம் செய்யுளின் மையக்கருத்து யாது?**

அருவமாய் உள்ள இறைவனை உருவம் கொண்டு வழிபடுதல் வேதம் சொன்ன முறைகளே. ஞானத்தை விளக்கும் வேதம் சாயுச்சியுடன், சாலோகம், சாமீபம்,

சாரூபம் ஆகிய மூன்றினைக் கூறும். இம்முறையில் சாரூபமாகிய உருவமும் ஒன்றாகும்.

**80. உருவ வழிபாட்டிற்கு சுவாமிகள் கூறும் உதாரணம் யாது?**

எல்லா சமயங்களும் அதனை ஸ்தாபித்த ஆசான் உருவை வழிபடும் பொழுது இறைவனை உருவத்தில் வழிபடுவதை மறுப்பது முறையான தர்க்கம் அல்ல என்று சுவாமிகள் கூறுகின்றார்.

''சித்து அறை வேதம் சாயுச்
சியத்தோடு சாலோக ஆதி
முத்திறம் எடுத்துக் கூறும்
முறைமையுள் உருவம் ஒன்றே
இத்திறம் மறுத்தல் பொய்யாய்
இழியும் இஃது எதற்கோ எத்
தத்துவ மதமும் ஆசான்
தன்உரு நீத்தது இன்றே''
(செ. 76)

**81. முற்கூறிய பாடலில் சாயுச்சியம் என்பதின் பொருள் யாது?**

சாயுச்சியம் என்பது இரண்டறக் கலத்தல்.

**82. முற்கூறிய பாடலில் சாலோக ஆதி முத்திறம் யாது?**

சாலோகம் – இறை உலகை அடைதல்
சாமீபம் – இறைவனுக்கு அருகில் இருத்தல்,
சாரூபம் – இறைவனைப் போன்ற உருவத்தைப் பெறுதல்.

**83. செவ்வேள் பரமனின் உருவத்தை வர்ணிக்க**

அருள் ஒளி நிகழும் ஆறு திருமுகங்கள் தாமரை போன்ற இரண்டு திருவடிகள். நெடிய பன்னிரண்டு தோள்கள், நெற்றிக் கண்ணையும் சேர்த்து பதினெட்டு திருக்கண்களும் பொருந்திய திருமேனியுடன் செவ்வேள் பரமன் விளங்குகின்றார்.

''முதுமறை புகழும் ஆறு
முகஒளி மண்டலங்கள்,
பதுமநன் மலர் இரண்டு
பாதம், நீள் தோள்கள் ஈராறு
இதரம் இல் நுதல் கண்ணோடே
எழில்விழி பதினெட்டாக
மதன்உறு செக்கர் வேளின்
வடிவம் அதுஇயங்கும் மன்னோ''

(செ.77)

**84. செவ்வேள் பரமன் திருவுருவம் கொள்ளக் காரணம் யாது?**

பகைவர்களைத் தண்டிக்கவும், அடியவர்களுக்கு அருள் புரிவதற்கும் உருவம் எடுக்கின்றார்.

**85. செவ்வேளின் விசுவ ரூபத்தையும், அருளும் சிறிய ரூபத்தையும் சுவாமிகள் எவ்வாறு விவரிக்கிறார்?**

விசுவரூபமும் மூர்த்தவடிவங்களும் நல்ல பாம்பு தனது படத்தை விரித்துக்கோடலையும் அப்படத்தைச் சுருக்கிக்கொள்வதையும் ஒக்கும் என்கின்றார்.

''மல்கு பேர் உருவே பார
மேச்சுர வடிவு, மாற்றார்க்
கொல் குரோதம் தயாளம்
கோடல் சிறுகரு இரண்டும்
பல்குபேர் அழகு ஆர் நாக
படம் விரிதலையும் அஃதே
அல்கு நேரினையும் ஒக்கும்,
ஆதலின் உரிமை ஆமே.''

(செ.80)

**86. மேலே கூறிய பாடலில் பாரமேச்சுர வடிவு என்பதின் பொருள் யாது?**

விசுவரூபம் என்பதைக் குறிக்கும்.

**87. செவ்வேள் வழிபாட்டின் சிறப்பு யாது?**

வித்தினுள் பெரிய ஆலமரமே அடங்கியிருத்தல் போன்று, இறைவன் விளங்கும் சிறுதிருமேனியின் கண் எல்லாப் பொருள்களும் அடங்கியிருப்பதால், அத்திருமேனியை வழிபடுவது, எல்லா அண்டங்களிலுமுள்ள மூர்த்திகளை வழிபடுவதற்கு ஒப்பாகும்.

''வித்து இடை விருக்கம் போன்று
விளங்கு சீறு உருவில் எல்லா
வத்துவும் இருத்தலாலே
இதை வணங்கிடல் பேர் அண்டம்
எத்தனை உளகொல் எல்லாம்
இறைஞ்சுமா பூசை ஆம்இச்
சித்துஉரு அனந்த ரூபம்
திகழ்தர வைப்பாய் நிற்கும்''

(செ.81)

**88. மேலே கூறிய பாடலில் அமைந்துள்ள விருக்கம், சீறுஉரு, சித்துஉரு என்ற சொற்தொடர்களுக்குப் பொருள் யாது?**

விருக்கம் – மரம்
சீறுஉரு – சிறுஉருவம்
சித்துஉரு – அறிவு உருவம்

**89. எது முழுபூஜை ஆகாது?**

வானம், நிலவு, சூரியன் மற்றும் பிற பொருட்களையும் தெய்வமாக எண்ணி கைகூப்பி வழிபடுவது, ஞானமே திருமேனியாக உடைய செவ்வேளை வழிபடுவது போன்ற முழுபூஜை ஆகாது.

''ஓர் அறிவு இல்லா விண்ணை–
ஒளிதரு விளக்கை அல்லோன்–
பேர் அறிவு இல் ஞாயிற்றைப்
பிறபொருள்களைக் கைகூப்பல்

ஆர் அறிவு உடைச் சேய் பூசை
யாமுழுப் பூசை ஆகாது
ஏர் அறிவுடைச் செம்மாப்பும்
ஏய்வது இன்று, ஏய்வது இன்று ஆல்

(செ.82)

**90. செவ்வேளை வழிபடாது பிற பொருட்களை வழிபடுபவதிற்கு ஆசிரியர் கூறும் உவமையாது?**

செவ்வேளை வழிபடாது பிற தெய்வங்களை வழிபடுவது, உள்ளங்கையில் நிரம்பியுள்ள தேனைக் கவிழ்த்து விட்டு, புறங்கையில் சிறிதே ஒழுகும் தேனை நக்குவதற்கு ஒப்பாகும் என்கின்றார்.

''செங்கைவேல் இறை என்னாது
செய்பிற தேவர் பூசை
அம்கையார் தேன் கவிழ்த்துப்
புறங்கை நக்குதல் போல் ஆம் அத்
திங்கள் வான் ஆதி மாட்டும்
செக்கர்வேள் உருப் பாவித்தல்
மங்களம் என்னும் நேரே
வணங்கல் இப் பிறப்பில்முற்றும்'' (செ.83)

**91. செவ்வேள் எப்படியெல்லாம் அடியார்களுக்கு அருள் செய்கின்றான்?**

தொடுதல், கண்ணால் பார்த்தல், உபதேசம், உள்ளக் குகையில் நடனம் செய்தல் முதலிய அருட்செயல்களால் தன்னைவந்து அடைந்தவர்களுக்கு விரும்புவனவற்றை எல்லாம் வழங்கி அருள்புரிவான்.

''தீண்டல் இல் நோக்கினாலும்
திருமொழி நடிப்பினாலும்
வேண்டுநர் விழைதல் ஈவான்''

(செ. 84)

**92. முருகப் பெருமானுக்குரிய ஆறுமுகங்கள் யாவை?**

ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோ சாதம், குடிலை என்பன ஆறுமுகங்களின் பெயராகும்.

''முன் எடுத்து உரைத்தவாறு
முகங்களில் ஒன்று ஈசானம்
மன்னு தற்புருடம் ஒன்று
மல்கு அகோரம் தான் ஒன்று
தென் உறுத்து ஒன்று வாம
தேவமே சத்யோ சாதம்
என்னுமற்று ஒன்று, வேறொன்று
ஏண்உறு குடிலை, ஆமே''

(செ.86)

**93. மேலே கூறிய பாடலில் குடிலை என்பது எதனைக் குறிக்கும்?**

குடிலை – (பிரணவம்) சக்தியைக் குறிக்கும்.

**94. ஞானநூல்கள் யாது கூறுகின்றது?**

சத்தியோ சாதம், வாம தேவம், அகோரம் தற்புருடம், ஈசானம் ஆகிய ஐந்து முகங்களும் சிவபெருமானது திருமுகங்கள் என்றும், குடிலையானது ஒளிநிரம்பிய தேவியின் திருமுகம் என்றும் ஞானநூல்கள் கூறும்.

''அடல், அவிர், சத்தியோ சாத
ஆதிஓர் ஐந்தும் கொன்றைப்
படலை கொள் சிவன்முகம் கேழ்
பராவுசிற்பரை ஒன்று என்றே
செடல் அறு முதல்வன் நூல்கள்
கிளத்து ஒரு திறத்தினாலே
குடிலையை ஞானம் ஆகச்
சத்தியாய்க் கூறல் சாலும்''

(செ.87)

**95. முற்கூறிய முகங்களுக்குரிய தொழில்கள் யாவை?**

சத்தியோ சாதம் – படைத்தலைச் செய்யும்.

வாமதேவம் – படைக்கப்பட்ட உலகங்களை காத்தல் செய்யும்.

அகோரம் – அவற்றை அழித்தல் செய்யும்.

தற்புருடம் – மறைத்தலைச் செய்யும்.

ஈசானம் – வீடுபேற்றை அருளும்.

குடிலை என்னும் திருமுகம் இந்த ஐந்து முகங்களுக்கும் மூலமாய் விளங்கும்.

''சத்தியோ சாதம் எல்லாச்
சகத்தையும் படைக்கும், வாமம்
அத் தரா தலங்கள் காக்கும்
அகோரமே அழிக்கும் என்க
சித்தி ஆர் புருடம் திகராதம்
செய்யும், ஈசானம் அன்பால்
முத்தி வீடு அருளும், ஐந்தின்
மூலமாய்க் குடிலை நிற்கும்''
(செ. 88)

(தராதலங்கள் – உலகங்கள்)

**96. செவ்வேளின் கரத்தில் உள்ள படைக் கலங்கள் யாவை?**

வேற்படையை தன் கரத்தில் ஏந்தும் செவ்வேள் பரமனின் ஏனைய பதினொரு கைகளிலும் எறியீட்டி, அம்பு, மழு, ஈட்டி, மணி, தாமரை, வில், கூரியவாள், தோட்டி, வலிமைமிக்குள்ள வச்சிரப்படை, கொடி என்னும் பதினொரு படைக்கலங்களாகும்.

''பரம் எனும் சத்தியைத்தான்
படைக்கலத்து அரசாய் ஏந்தும்
கர அறுமுகவேள் ஏனைக்
கரங்களில் தோமரம் போல்
பரசு, பிராசம், கண்டை
பதுமம் வில் கூர்வாள் தோட்டி
உரன் உறு குலிசம் தோகை
எனப் பதினொருவர் உற்றார்'' (செ.89)

**97. முற்கூறிய பாடலில் தோமரம், கோல், பரசு, பிராசம், கண்டை, பதுமம், குலிசம், தோகை முதலிய தொடர்கள் எதைக் குறிக்கும்.**

தோமரம் – எறியீட்டி
கோல் – அம்பு
பரசு – மழு, கோடரி
பிராசம் – ஈட்டி
கண்டை – மணி
பதுமம் – தாமரை
குலிசம் – வச்சிராயுதம்
தோகை – கொடி

**98. பதினொரு படைக்கலங்கள் எவர்களைக் குறிப்பிடுகின்றது?**

பதினொரு உருத்திரர்களைக் குறிப்பிடுகின்றது. (ஏகாதச உருத்திரர்)

**99. செவ்வேளில் வலதுகையில் உள்ள படைக்கலங்கள் யாவை?**

வேற்படை, வாள், அம்பு, வச்சிரம், மழு, கொடி ஆகியவை செவ்வேளின் வலது கையில் உள்ளன.

''சத்தி, வாள், பகழி, மொய்ம்புச்
சதமுனை, பரசு, தோகை,
அத்தன் நீள் வலத்தோள் தாங்க. (செ.90)

**100. செவ்வேளின் இடது கைகளில் உள்ள படைக்கலங்கள் யாவை?**

அங்குசம், தாமரை, மணி, வில், எறியீட்டி, பெரிய ஈட்டி ஆகியவைகள் பெருமானின் இடது கைகளில் உள்ளன.

''அங்குசம் பதுமம், கண்டை
சுத்தம் நீள் இகல்வில், வன்மைத்
தோமரம், பெரும் பிராசம்,

அத்தன் நீள் இடத்தோள் தாங்க,
அமரும் என்று அறையலாம் ஆல்.''
(செ.90)

**101. இப்படைக்கல விபரங்களுக்கு ஆதாரமான நூல் எது?**

வட மொழியில் உள்ள கந்த புராணம்.

**102. சிவபெருமான் கையில் உள்ள மூவகைச் சூலம் எதைக்குறிக்கின்றது?**

இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞான சக்திகளைக் குறிப்பிடும்.

''இச்சை செல் கிரியை, ஞானம்
என்னும் மூவகையாம் சத்தி
நச்சு அரவு அணிந்தோன் கையில்
நறிய மூ இலையாய் நிற்கும்''
(செ.92)

**103. மகாதேஜோ மண்டல அடியவர்கள் யார்?**

என்றும் எங்கும் நிலைபெற்ற பரம்பொருள் செவ்வேளே என்று உணர்வோர் மகாதேஜோ மண்டல அடியவராய் விளங்கும் தன்மையர் ஆவார்.

''சரத, பூரணன் என்று ஓர்வார்
தொகைப்படா மாதே சோமண்
டலத்தராய்ச் சுடரு நீரார்.''
(செ.93)

**104. ஆறுமுகங்களும் நோக்கும் திசைகள் யாவை?**

1. குடிலை - கீழ்நோக்கி இருப்பது
2. ஈசானம் - மேல் நோக்கும்
3. சத்யோ சாதம் - மேற்கு நோக்கும்
4. வாம தேவம் - வடக்கு நோக்கும்
5. அகோரம் - தெற்கு நோக்கும்
6. தற்புருடம் - கிழக்கு நோக்கும்

''கேழ்உறு குடிலை, ஈசம்,
சத்தியோ சாதம், கேடில்

மாழைகொள் வாம தேவம்,
　　வளர் அகோரம், திரோதம்
கீழ் எனும் அதம், மேல், மேற்குக்
　　கெழுவடக்கு, அவாசி, பூர்வத்து
ஊழ்உறு முகம், நோக்காம் இவ்
　　வுண்மையும் பூர்த்திகாட்டும்.''
(செ.94)

**105. முற்கூறிய பாடலில் அதம், அவாசி என்ற சொற்களின் பொருள் யாது?**

அதம் – கீழ்
அவாசி – தெற்கு

**106. சீவன்முத்தர்களின் இச்சைக் கிரியை ஞானம் என்பனவற்றிற்கு பற்றுக் கோடாய் விளங்குவது எது?**

சீவன் முத்தர்களின் இச்சைக் கிரியை ஞானம் என்பனவற்றிற்கு இறைவனின் இச்சை, கிரியை, ஞானம் என்ற மூன்று சக்திகளும் பற்றுக் கோடாய் விளங்கும்.

''தா உறாச் சீவன் முத்தி
　　தசையினில் அறிஞர்ப் போற்றி
நோவு உறாத் தழுவல் செய்து
　　நூனம் இல் அறிவாய் நிற்கும்;
வீவு உறாக் கிரியை இச்சை
　　விவேகம் என்பனவற்றிற்கு ஈசன்
ஓவு உறாக் கிரியை இச்சை
　　உணர்ச்சி ஆதாரம் ஆமே.'' (செ.95)

**107. செவ்வேளின் படைக்கலங்களில் மேன்மையாக விளங்குவது எது?**

வேல்படை

**108. வேல்படை உணர்த்துவது எது?**

வேல்படை என்பது இருள் எனப்படும் ஆணவமல அழிவைச் செய்வது என்பதை உணர்த்தும்

**109. தோமரம் உணர்த்தும் தத்துவம் யாது?**

தோமரம் தூயமாயையில் சுத்த தத்துவங்கள் தோன்றுமாறு அங்கே தன் பெருவலிமை விளங்க செல்லும் ஒப்பற்ற வளப்பத்தை உணர்த்தும்

''தோமரம் தூய மாயைத்
தோற்றம் உண்டாம் ஆறு ஆண்டு
மா முரண் திளைக்கச் செல்லூர்
வண்மையை உணர்த்தும்.''
(செ.99)

**110. தூயவாட்படை உணர்த்தும் தத்துவம் யாது?**

தூயவாட்படை பிணிக்கும், சாவுக்கும் உறைவிடமான பிறவிக்கொடியின் வேரை அறுத்தலை உணர்த்தும்.

''.................. வால் வாள்
நோம் மரணம் சார் தோற்றக்
கொடியின் வேர் நொடித்தல் காட்டும்''
(செ.99)

**111. தாமரை உணர்த்தும் தத்துவம் யாது?**

தாமரை விரிந்து கூம்பும் எல்லா உலகங்களும் செவ்வேள் பரமனது உடமைகள் என்பதை உணர்த்தும்.

''தாமரை விரிந்து ஒவு எல்லாம்
தலைவன் எனல் உணர்த்தும்''
(செ.99)

**112. செய்யுள் 99இல் அமைந்துள்ள வால், நோன், நொடித்தல் என்பவைகளின் பொருள் யாது?**

வால் – தூய்மை
நோன் – துன்பம்
நொடித்தல் – அழித்தல்

**113. ஈட்டியும், வச்சரப்படையும் உணர்த்தும் தத்துவம் யாது?**

ஈட்டியும், வச்சரப்படையும் சேய் பரமன் பிறவிப் பிணியை அளிக்கும் வெற்றியைத் தருவார் என்பதையும், இவர் பிறரால் அழிக்க முடியாதவர் என்பதையும் உணர்த்தும்.

''ஈட்டியும் குலிசமும் தான்
இவர் பவ நாச வெற்றி
காட்டுவர்., பிறரால் கேடு
காண்கிலர் எனல் உணர்த்தும்.''
(செ.100)

**114. வில்லும் அம்பும் உணர்த்தும் தத்துவம் யாது?**

வளைந்த வில்லும் அம்பும் ஆங்காரமாகிய கொடிய மல வளர்ச்சியை அழிக்கும் வலிமையை உணர்த்தும்.

''கோட்டு வில் கணை ஆங்காரம்
கொடுமல விருத்தி நாச
தாட்டிகம் உணர்த்தும்''
(செ.100)

**115. தோட்டி உணர்த்தும் தத்துவம் யாது?**

தோட்டியானது சத்துவம், ராட்சதம், தாமதம் ஆகிய முக்குணங்களையும் செலுத்துவதை உணர்த்தும்.

''தோட்டி தான் குணம் செலுத்தல் காட்டும்''
(செ.100)

**116. பரசு உணர்த்தும் தத்துவம் யாது?**

ஞான ஒளியாகிய பராசக்தி செவ்வேளின் உள்ளக் கிளர்ச்சியில் நிற்பவள் என்பதைப் பரசு உணர்த்தும்.

''பரசு தத்துவத்தின் சாம்பல்
பண்ஒளிப் பரை, இவ் ஈசர்
உரனில் நிற்பவனே யாவள்
என்பதை உணர்த்தும்'' (செ.101)

**117. கொடி உணர்த்தும் தத்துவம் யாது?**

ஊர்த்துவ மாயைக்கு தலைவராகிய இப்பெருமானிடத்தே எல்லா உலக வெற்றிப் பாடும் உளதாகும் என்னும் வளப்பத்தைக் கொடி உணர்த்தும்.

''...................... தோகை
பிரணவத்து ஊர்த்த மாயைப்
பிரான் இவர் மாட்டே வெற்றி
மரபு அனைத்தும் காண்க என்னும்
வண்மையை உணர்த்தும் ஆல் ஓ''
(செ.101)

**118. செவ்வேளின் ஊர்தி யாது? அஃது உணர்த்தும் தத்துவம் யாது?**

மயில் ஊர்தியாகும். அஃது அதோமாயையை உணர்த்தும்.

**119. செவ்வேளின் கொடி யாது?**

சேவல் கொடியே அவரது கொடியாகும். அஃது ஊர்த்துவ மாயையைக் குறிக்கும்.

**120. சேவல் கூவுகின்ற சாதாரண நிகழ்வை சுவாமிகள் தற்குறிப்பு அணி தோன்ற எவ்வாறு வியந்து போற்றுகிறார்?**

''இவ்வுலக இன்பத்தை விரும்பும் மனம் உடையவரே! ஞானானந்தப் பேற்றை விரும்பும் அறிஞரே! நீவீர் விரும்புவனவற்றைப் பெறுவதற்கு இன்ப உருவினனான செவ்வேளிடம் வருவீராக'' என்று அழைப்பது போல் கூவுகிறது என்று சுவாமிகள் கூறுகின்றார்.

''இன்னும் அத்தோகை,'' ஞால
இன்பினை விழை நெஞ்சு உள்ளீர்!
மன்னு சித்து இனிமை வேட்கும்
மதி உளீர்! அவை கோடற்கு இவ்

இன்னல் இலான்பால் வம்மின்!
என அழைப்பவர் போல் கூவி''
(செ.102)

**121. செவ்வேளின் திருக்கையிலுள்ள மணி, உடுக்கைகளும், திருவடிகளில் உள்ள சிலம்பும் எவைகளை உணர்த்துகின்றது?**

மணி, உடுக்கை, சிலம்பும் தூய மந்திரம், எழுத்து என்பனவற்றைப் படைக்கும் பர நாதத்தின் ஒழுங்கிலே படைப்பையும், அழகிய அந்த நாதம் அவன் திருவடிகளைத் தாங்கி நிற்பதையும் உணர்த்தும்.

''கண்டையொடு உடுக்கை கையில்
கணிக்கின் இரண்டும் காலில்
மண்டிய சிலம்பும் தூய
மந்திரம் எழுத்து இவற்றை
உண்டுசெய் பரநாதத்தின்
ஒழுங்கிலே படைப்பும், அந்தம்
கொண்ட அந்நாதம் தாளைக்
கோடலும் உணர்த்தும் ஆல் ஓ.''
(செ.103)

**122. மேலே கூறிய பாடலில் கண்டை என்பது எதைக் குறிக்கும்?**

கண்டை என்பது மணியைக் குறிக்கும்.

**123. மேலே கூறிய பாடலில் அந்தம் என்ற சொல் என்ன பொருளில் வந்துள்ளது?**

அந்தம் என்பது அழகு என்ற பொருளில் வந்துள்ளது.

**124. திருமுடியும், மார்பில் அணிந்துள்ள ஆபரணங்களும் உடையும் எவைகளை உணர்த்தும்?**

அவைகள் செவ்வேள் பரமனை பணிதலால் உண்டாகும் செல்வத்தை உணர்த்தும்.

‘‘அணிமுடி மதாணி ஆதி
அணி உடை ஆக்கம் சேயைப்
பணிதலின் உண்டாம் என்றல்
உணர்த்தும்’’ (செ.104)

**125. செவ்வேளுக்குரிய மாலைகள் எவை?**

கடப்ப மாலை, வெண் காந்தள் மாலை, வெட்சி மாலையாகும்.

**126. இம்மாலைகள் எவைகளை உணர்த்தும்?**

தூய்மையைக் காட்டும்.

‘‘............. நீபத் தார் வேறும்
கணிதம் இலாத தூய்மை
காட்டும்’’ (செ.104)

**127. வலது அபயகரம் எதைக் காட்டுகிறது?**

வலது அபயகரம் ‘‘என்னைத் தொழுபவனே! அஞ்சேல்’’ என்னும் அபயக்குறியைக் காட்டும்.

‘‘மலத்து அடல் மாய்க்கும் வேலன்
வன்படை ஏந்தாது உள்ள
வலத்து அபயத் தோள்,’’ அஞ்சேல்
வணங்குவோய்’’ என்று உணர்த்தும்’’
(செ.105)

**128. இடது வரதகரம் எதைக் காட்டுகின்றது?**

இடது வரதகரம் ‘‘எனது நல்ல திருவடியே உனக்கு வலிமை மிக்க புகலிடம்’’ என்பதைக் காட்டுகின்றது.

‘‘நலத்து இடத்தோள் ஆகும்
வரதம் நிற்கு எனது நல்தாள்
பலத்த ஓர் தஞ்சம் என்றே
பணித்தலை உணர்த்தும் மாதோ’’
(செ.105)

**129. செவ்வேள் பரமனின் உருவம் அருவுருவம், அருவம் ஆக உள்ள தத்துவங்கள் எவை?**

நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி என்ற நான்கு கலைகளும் உருவமாகும். சாந்தியதீதம், விண் என்பன அருவுருவமாகும். குடிலை அருவமாகும்.

''நண்ணிடு நிவிர்த்தி ஆதி
நாற்கலை உருவ அதீதம்
விண் அருவுருவமாம் வீறுஆர்
குடிலை தான் அருவாம் இஃதே.''
(செ.110)

**130. சுவாமிகள் குறிப்பிடும் அறநெறி யாது?**

கொடிய செயலுக்கேற்ப ஒறுத்து துன்பம் தருதலும், நல்லோர் செயலுக்கேற்ப காத்தலும் செய்து ஆட்சி செய்வதே அறநெறியாகும்.

**131. தேவ நீதி யாது?**

நல்வினை செய்த உயிர்கள் சொர்க்கத்தை அடைந்து இன்புறும். தீவினை செய்த உயிர்கள் நரகத்தை அடைந்து துன்புறும்.

**132. சமய மறுப்பு கூறுவோரின் கொள்கைகளை சுவாமிகள் எப்படி விவரிக்கிறார்?**

இவ்வுலகில் நுகரும் இன்பமே சொர்க்கமாகும்; துன்பமே நரகம். இங்ஙனமன்றி சொர்க்கம், நரகம் என்று தனியாக இல்லை எனச் சிலர் கூறுவர்.

**133. மேற்கூறுவார் கூற்றை சுவாமிகள் எவ்வாறு மறுக்கிறார்?**

ஒருவர் வாயில் ஊறும் உமிழ்நீரே நீர் எனப்படுவது. அஃதன்றி நீர் என்ற தனித்த பொருள் கிடையாது என்று சொல்வதற்கு ஒப்பாகும் என்கின்றார்.

''இப்புடவியிலே நாம் காண்
இன்ப துன்பங்கள் தாமே
செப்பிடு நரகு, சொர்க்கம்,
வேறு இலை என்பார் கூற்றை

அப்பு எனும் நீர் நம் வாயை
அன்றி வேறு இன்று என்பான் சொற்கு
ஒப்பிடுவாறே அண்ட
ஒழுங்கினை உணர்ந்த நீரார்''.
(செ.118)

**134. செவ்வேள் பரமனுடைய ஒப்பற்ற சொர்க்கமாகிய சோமலோகம் பற்றி அறிஞர்கள் என்ன கூறுவர்?**

அதையே பிறப்பும் இறப்பும் கடந்தவர்கள் வாழும் சிவலோகம் என்று அறிஞர்கள் கூறுவர்.

''பிரணவ மேனிச் செவ்வேள்
பிரான் ஒரு பெரிய சொர்க்கம்
பிரணவ தூய மாயை
பிறங்கும் உன் மனை உலோகத்து
அரண் நபம் மேலாம் சோம
லோகமே யாம் அதைத்தான்
மரண சன்மங்கள் இல்லார்
வதி சிவலோகம் என்பார்.''
(செ.119)

**135. செவ்வேள் பரமன் சிவலோகம் தவிர வேறு எந்த மலைகளில் எழுந்தருளி அருள் புரிவார்?**

இமயமலைக்கும் ஏமகூட மலைக்கும் நடுவில் உள்ள வெள்ளி மலையாகிய பூலோக கைலாயத்தும், மகா கைலாயத்தும் மந்தர மலையிலும், பொன் மலையாகிய மேரு மலையிலும் சக்கரவாள மலையிலும் எழுந்தருளியிருந்து அருளாணை நடத்துவன். கைலையைச் சார்ந்துள்ள கண்டமா தனத்தும் அப்பெருமான் எழுந்தருளியிருப்பார்.

''கயிலை மாகயிலை மந்த
ர அசலம் கனக மேரு
வெயிலை வீசு அடலும் சேடு
மேவு சக்கரவாளப் பேர்ச்

சயிலமேல் சொன உலோகம்
சார்ந்து அரசாட்சி செய்யும்
அயில்இறை கயிலை சார்கந்
த அசலம் அதிலும் வைகும்''
(செ.120)

**136. மேற்கூறிய சிவலோகம் எங்கு உள்ளது என்று சுவாமிகள் கூறுகின்றார்?**

சிவலோகம் என்பது தூலப் பிரகிருதி, சூக்கும பிரகிருதி ஆகியவற்றிற்கு மேல் நிலையில் உள்ள பரப்பிரகிருதியின் உச்சியில் உள்ளது என்கின்றார்.

**137. அதன் விளக்கங்களை சுவாமிகளின் எந்த நூலில் அறியலாம்?**

திருப்பா என்னும் நூலின் உரையாகிய திட்பம் என்பதில் அறியலாம்.

''சொற்ற ஓர் சிவலோகம் தான்
தூல சூக்குமம் என் பேர்கள்
பெற்று உள பகுதி கட்கும்
பெரிது எனப் பரம் எனும் பேர்
உற்று அவிர் பகுதி உச்சி
உளது எனல் மேற்கோளோடு
சொற்று உள எனது திட்பம்
துலக்கலான மதுகைத் தாமே.''
(செ.121)

**138. சிவலோகத்திற்கு ஒப்பாகவோ உயர்வாகவோ வேறு உலகம் கிடையாது என்பதை சுவாமிகள் எப்படி நிலை நிறுத்துகின்றார்?**

அந்தப் பரப்பிரகிருதியில் விளங்கும் உன்மனா கலைக்கு மேற்கூறப்படும் கலை ஏதும் இல்லை. ஆகவே சிவலோகத்திற்கு ஒப்போ உயர்வோ உள்ள உலகம் கிடையாது.

''அப்பரப் பகுதி தன்னில்
அவரும் உன் மனைக்கு மேலே

செப்பிடக் கலை ஒன்று இல்லை,
ஆதலின் ''சிவலோகத்திற்கு
ஒப்பும் இன்று உயர்வும் இன்று''
(செ.122)

**139. செவ்வேள் பரமனின் தகைமை எப்பொருட்கும் தலைமை கொண்டு விளங்குவது என்பதை சுவாமிகள் எப்படி உணர்த்துகின்றார்?**

அசுர வீரர்கள் வீசிய படைக்கலங்கள் வீரபாகு முதலியோரை பலமுறை தோள்களைப் பிணித்து மயக்கமடையச் செய்தது. ஆனால் ஓங்கார வடிவினனான செவ்வேள்மாட்டு அதன் ஆற்றல் செல்லவில்லை. அவனை நெருங்காது இருந்தது, செவ்வேளின் சிறப்பை உணர்த்தும்.

''வெஞ்சிர அசுர வீரர்
வெய்து எனப் பல்கால் வீச
விஞ்சிய மாயா பாசம்
வீரபாகு ஆதி யோரை
மஞ்சொடு பல்கால் யாத்து ஓம்
மழவனை விடுத்ததே அச்
செஞ் செயலானும் அன்னோன்
திணைதலை எனல் சால் பரமே''
(செ.123)

**140. செவ்வேள் பரமனின் மாண்பை சுவாமிகள் எவ்வாறு உணர்த்துகிறார்?**

செவ்வேள் பரமன் தேனாகத் தித்திக்கும் ஒப்பற்ற தெய்வம். வேதங்கட்கும் எட்டாமல் ஓங்கி ஆழ்ந்து அகன்ற துண்ணியன். சுவாமிகளை ஆண்டு கொள்ளும் அன்புப் பிழம்பன். தன்னை அண்டியவர்களின் இறப்பையும் பிறப்பையும் ஒழிக்கும் இன்பப்பொருள். இனிய சுவையுடைய கரும்பு போன்றவன். கற்கண்டாய் சுவை தருபவன் என்று போற்றுகிறார்.

''இத்திற மூர்த்தி தன்னை
என்ஒரு தெய்வத் தேனை
எத்திற மறைக்கும் எட்டா
இறைவனை - எனை ஆள் அன்பைச்
செத்துறல் ஒழிக்கும் இன்பைத்
தீஞ்சுவைக் கரும்பைக் - கண்டைக்''
(செ.124)

**141. செவ்வேளின் சிறப்பை ஓத சுவாமிகள் கையாண்டுள்ள அளவைகள் யாவை?**

முருகனின் சிறப்பை உணர்த்த மறை, ஆகமம், வடமொழிக் கந்தபுராணம் என்ற நூல் அளவையும், கிடைத்தற்கரிய ஒப்பற்ற காட்சி அளவையும் ஆகும்.

''ஆகலான் அவன்சீர் சொல் நூல்
அளவையோடு அரிய காட்சி
ஆகும் ஓர் அளவையும் தான்
ஆர்ந்தது என் மார்க்கம் ஆகும்.''
(செ.127)

**142. மஹாதேஜோ மண்டலத்தைச் சேர்ந்தவர் யார்?**

எத்தகைய துன்பம் நேர்ந்திடினும் தளராமல் செவ்வேளின் அருள் ஒன்றையே விரும்பி ஒழுகுவார் மனக்கவலையை மாற்றும் மகா தேசோ மண்டலத்தைச் சேர்ந்தவர் ஆகி இன்புறுவர்.

''அவன் அருள் ஒன்றே வேட்டு எல்
அரந்தை வந்து உறினும் நிற்போர்
எவண் உறு பதியில் தோன்றி
எங்கு இருந்திடினும் சாதி
எவன் என வினவுவார் முன்
யாது உரைத்திடினும் அன்னோர்
கவனம் இல் மாதேசோ மண்
டலத்தராய்க் களிப்பார் மன்ஓ''.
(செ.128)

**143. செவ்வேள் முருகனுக்குரிய தேவியர் இருவர் யார்?**

செவ்வேளுக்கு தேவயானை, வள்ளியம்மை என இரு தேவியர் உளர். அவர்கள் தொன்மையில் திருமாலின் கண்களிலிருந்து தோன்றி செவ்வேளை மணந்து கொள்ள செய்த தவத்தின் பயனால் இப்பேறு பெற்றனர்.

''செக்கர் மெய் வேட்கு இரண்டு
தேவிகள் உளர் ஆல் அன்னோர்
எக்கலைகளுக்கும் செல்வம்
எதற்குமே தெய்வம் ஆவர்
அக் கருணா சொரூப
அவரை வல்லியராய்க் கூறல்
தக்கவர் தொன்மை உண்மை
தகைமை கண்டு உரைத்ததாகும்''
(செ.129)

**144. இவ்விருவரும் முப்பிறவியில் யாராக இருந்தனர்?**

திருமாலின் மூத்த மகளான அமுதவல்லி தேவயானையாகப் பிறந்தார். இளைய மகளாகிய சுந்தரவல்லி வள்ளியம்மையாகப் பிறந்தார்.

''முன்னவட்கு அமுதப் பேர்தான்
மொழியலாம் அவள் தேவானை
என்னும் ஓர் பெயரும் கொண்டாள்
இளையவள் சுந்தரப் பேர்உள்ளாள்
அன்னவள் பெயர்தான் வள்ளி
ஆகுமாறு இலங்கினாள்''
(செ.130)

**145. இவ்விருவரும் செவ்வேளின் எப்பக்கம் உள்ளனர்?**

செவ்வேளின் வலது பக்கத்தில் வள்ளியும் இடது பக்கத்தில் தேவயானையும் எழுந்தருளியுள்ளனர்.

''.................... செவ்வேள்
வலம் திகழ்வுற்றாள் வள்ளி
மற்றவள் இடமே உற்றாள்'' (செ.131)

**146. செய்யுள் 131இல் உள்ள ‘‘நலம் திகழ் சரியைஆதி நால் திற மார்க்கம்’’ எவை?**

சரியை, கிரியை, யோகம், ஞானம்.

**147. எது எதைச் சார்ந்து நிற்கும்?**

சரியை என்பது கிரியையும், யோகம் என்பது ஞானத்தையும் சார்ந்து நிற்கும்.

**148. தேவிகள் இருவரையும் எவ்வகை சத்திகளாக சுவாமிகள் கூறுகின்றார்? அதற்குக் காரணம் யாது?**

தேவயானை பொன்னிற மேனியளாய் தேவ லோகத்தில் இருந்தமையால் ஞான சக்தியாவாள். வள்ளிப் பிராட்டி பச்சைத் திருமேனியளாய் மண்ணுலகில் இருந்தமையால் கிரியா சக்தியாவாள் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

‘‘ஆதலால் தேவ யானை
அமுதமாய் மேனி பொன்மை
ஈதலால் தேவலோகில்
இருந்ததால் ஞானம் ஆவள்;
கோதிலாச் சுகுண வள்ளி
குழகியாய் மேனி பைமை
ஈதலால் பூலோகத்தில்
இருந்ததால் கிரியை ஆவாள்’’

(செ.132)

(பைமை – பசுமை நிறம்)

**149. மேலும் சுவாமிகள் இதற்கு என்ன காரணம் கூறுகின்றார்?**

அமுதவள்ளி என்னும் பெயரில் உள்ள அமுதம் என்பது முத்தியைக் கூட்டும் ஞானமாகும். எனவே இத்திறமும் அவளை ஞானசத்தி என்று காட்டும். சுந்தரம் என்னும் சொல் தொழிலாகும். எனவே

இத்திறமும் சுந்தரவல்லியாய் இருந்த வள்ளிப் பிராட்டியைக் கிரியா சக்தி எனக் காட்டும். (வள்ளியை இச்சா சக்தி என்றும், தேவ யானையை கிரியா சக்தி என்றும் சிலர் கூறுவர். அது சுவாமிகளுக்கு உடன்பாடு அன்று).

''இம்முறை மாற்றி வேறாய்
இசைக்குநர் கூற்று ஒவ்வாது''
(செ.134)

**150. இவ்விருவரின் அழகையும் சுவாமிகள் எதற்கு ஒப்பிடுகிறார்?**

இரு தேவிமார்களின் அழகு ஒரு கடலை ஒக்கும். ஏனைய தேவமாதரின் வனப்பு எல்லாம் கூடினாலும் அக்கடலின் ஒரு துளிக்கும் ஈடாகாது என்கிறார்.

''அலகுஇன் நல் வனப்புக்கு எல்லாம்
அதிதெய்வம் ஆகி மேல்கீழ்
உலகுகள் போற்ற ஓங்கு அவ்
உப சயத்திகள் மாபொற்பு ஓர்
சலநிதி நிகர்க்கும் மற்றைத்
தையலார் வனப்பு எலாம் அச்
சல நிதியினது ஓர் தூவல்
அளவையும் சாரா அன்றே''.
(செ.137)

**151. இவ்விரு தேவிமார்களின் திருவுருவங்களுக்கு தொண்டு செய்யும் சிறந்த அன்புடைய மகளிர் அடையும் பயன் யாது?**

கற்புக்கு இலக்கியமாக ஓதப்படும் அருந்ததி என்பவளுக்கும் குருமார் ஆகி பொருட் செல்வரும் ஞானச்செல்வரும் போற்றுகின்ற தெய்வங்களாகிப் பேரின்பம் அடைவர். ஒரு வேளை பிறவி எடுக்க நேரிடினும் அப்பிறப்பில் பெருஞ்சிறப்புப் பெற்று பின் வீடு புகுவர்.

''திருவுக்குத் திருவாய்க் கற்பின்
    தெய்வமுமாய் மல்கு அன்னோர்
உருவுக்குத் தொழும்பு செய்யும்
    உழுவல் நாரியர் கற்பு ஓதும்
குருவுக்கும் குருவாய்ச் செல்வர்
    குலம் தொழு தெய்வமாய் ஓர்
கருவுக்குட் புகும் ஓர் பான்மை
    காணினும் சிறந்து உய்வாரே''.
(செ.138)

**152. முற்கூறிய பாடலில் தொழும்பு, உழுவல் என்ற சொற்களுக்குப் பொருள் யாது?**

தொழும்பு – அடிமைத் தொண்டு

உழுவல் – சிறந்த அன்பு

**153. செக்கர் வேள் செம்மாப்பு என்ற நூலை ஓதுபவர்கள் அடையும் பயன் யாது?**

செக்கர்வேள் செம்மாப்பு என்ற இந்த நூலை ஓதுபவர்கள் இவ்வுலக இன்பமும் பெற்று, நிரம்பிய திருவருட் பெருஞ்செல்வத்தையும் பெற்று நெடிது வாழ்வார்கள்.

''.................... பேரின்பு
    உமிழ் ஒரு செக்கர் வேள் செம்
மாப்பு என உலாம் இஃது ஓதும்
    அமிழ்தர்கள் உலகுஇன் போடு ஆர்
அருள் நிலை அணைந்தும் வாழ்வார்''.
(செ.140)

* * * * * *